



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 11, இதழ் - 1 ஜனவரி - பிப்ரவரி 2025

R4808

## SPIRITUAL GROWTH
## ஆவிக்குரிய வளர்ச்சி

“இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.” 2 பேதுரு 1:10

தாவரங்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஒரு தத்துவம் இருப்பதைப் போல, கிறிஸ்தவ குணலட்சணத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியிலும் உண்மையாகவே ஒரு தத்துவம் இருக்கிறது. இரண்டு விஷயங்களிலும் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியின் இயற்கையான முறைமைகள் மற்றும் நிபந்தனைகளை நாம் நன்கு அறிந்திருந்தால், விரும்பப்படக் கூடிய பலனாகிய முதிர்ந்த மற்றும் அதிகப்படியான பலனை அடைவதற்கு எப்படி வளர்த்து பாதுகாக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுவோம். ஒரு விவசாயி, எதிர்பாராத விதமாக கற்றுக்கொண்டவைகளை ஒழுங்கற்ற முறையில் அவசியத்தினால் மட்டுமே அதை கஷ்டத்துடன் முயற்சித்து அப்பியாசப்படுத்துகிறான். அவன் அதிகமான பலனை எதிர்பார்க்க முடியாது. தொழிலை நன்கு கற்று ஜாக்கிரதையாக சேகரித்த அறிவைக் கொண்டு வந்திருக்கிற சிக்கனமான துணிவுள்ள விவசாயி அதை தனது வேலையில் பயன்படுத்தும் போது அதிகமான பலனை அடைகிறான்.

உதாரணத்திற்கு ஒரு பழ மரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். விவசாயத்தைப் பற்றி எந்த அறிவும் இல்லாமல், மரத்தை நட்டு அதே வளரும்படி விட்டால், அது பழத்தைக் கொடுப்பதற்கு பதிலாக பொதுவாக மரத்தையும் இலைகளை மட்டுமே கொடுக்கும். புழுக்கள் மற்றும் அழுகுதலும் வேரை தாக்கும். பூச்சிகள் மற்றும் நோய்கள் பழங்களை கெடுக்கும். இது தொடர்ந்தால் அது பூமிக்கு பாரமாகவும், பயனற்றதாகவும் ஆகும். விவசாயியின் அலட்சியத்தால் அது வெட்டப்படுவதற்கு மட்டுமே தகுதியானதாக இருக்கிறது. ஆனால் அது தேவனுடைய காற்று, மழை மற்றும் சூரிய வெளிச்சத்தின் ஆசீர்வாதத்தின் கீழ், பூச்சிகள், வியாதிகள் இன்றி கிளைக் கழிக்கப்பட்டு சரியானபடி பராமரிக்கப்பட்டால் அது பலன் தரக்கூடிய, லாபம் தரக்கூடிய மரமாக இருந்திருக்கும். ஏனெனில் இயற்கையின் பிரமாணங்கள் எல்லா வகைகளிலும் உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் இருக்கின்றன.

நீதிநெறி குணலட்சணத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் நீதிநெறி பிராமணங்கள் ஒன்றும் குறைவுபட்டதாக இல்லை. சரியான நிலைமை சரியான மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியின் கீழ் நிலையான சட்டங்களின்படி குணலட்சணம் வளர்ச்சியடையும். அது தனக்கும் பிறருக்கும் ஆசீர்வாதங்களில் பலனுள்ளதாகவும் அழகானதாகவும் ஆகின்றது. சாதகமான இயற்கையான நிலைமைகளின் கீழ் தேவையான வளர்ச்சியில் குறைவுபட்டால், அது சிதைக்கப்பட்டு பலனற்றதும் பிரயோஜனமில்லாததாகவும் இருக்கும்.

நமது இரட்சகரின் புண்ணியத்தின் மூலம் நமது சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக நாம் ஒப்புக்கொடுக்கும் போது, நாம் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாக, ஆவிக்குரிய தளத்தில் புத்திர சுவீகாரத்தின் ஆவியை பெற்றோம். அந்த நேரத்திலிருந்து நமது அழிவுக்குரிய சரீரத்தின் மனோபாவமும் மனோ சக்தியும் தற்போது தேவனுடைய ஆவியின் கட்டுப்பாடு மற்றும் வழிநடத்துதலின் கீழாகவும் புதிய ஜீவனுக்குரியதாகவும் கருதப்படுகிறது. எண்ணம் மற்றும் கிரியையின் பழைய பழக்கங்களை தொடர்ந்து நீக்குதல் மூலம் நாம் வளர்க்கிற உண்மைத்தன்மை புதிய சுபாவமாக கருதப்படுகிறது. அங்கே புதிய குணங்களுக்கு இடங்கொடுத்து, தெய்வீக ஊழியங்களில் கிரியை நடப்பிக்க பயிற்றுவிப்பது, உயிர்த்தெழுதலில் பெறப்போகிற உண்மையான புதிய சுபாவத்திற்கு பாத்திரரா அல்லது அபாத்திரரா என்பதை நிரூபிப்பதற்காக ஆகும். நமது தற்கால நிலைமை, பூரண ஆவிக்குரிய நிலைமையின் ஒரு கருவின் நிலைமையாக இருக்கிறது. ஏனெனில் புது சிருஷ்டியின் மனோபாவம் மற்றும் குணலட்சணமே, உயிர்த்தெழுதலில் பிறக்கும் பூரணமடைந்த புது சிருஷ்டியின் மனநிலையாக இருக்கும்.

தேவனுடைய ஆவியை உண்மையிலேயே நாம் பெற்றிருந்தால் – அதை அவித்துப் போடாமல் அல்லது நம்மை விட்டு நீக்காமல் இருந்தால் – அது நமது அழிவிக்குரிய சரீரங்களை உயிர்ப்பித்து, தேவனிடத்தில் ஜீவனுடையவர்களாயிருக்கச் செய்து, அவருடைய சாயலிலும், கிறிஸ்துவ கிருபைகளிலும் நடவடிக்கைகளிலும் சுறுசுறுப்பாக வளரச் செய்யும் என்று அப்போஸ்தலர் உறுதிப்படுத்துகிறார். (ரோமர் 8:11) மேலும் அவர் கூறுகிறதாவது: “கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல.” “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினல் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” (ரோமர் 8: 9,14)

நம்மை தேவனுடைய பிள்ளைகளாக தகுதிப்படுத்துவதற்கும், “தேவனுடைய சுதந்தரர் மற்றும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராக” இருக்க அழைக்கப்படவும், அந்த பண்புகளில் வளரப்பண்ணுவது நமது வேலையாக இருக்கிறது.

### கிறிஸ்தவ குணத்தின் அபிவிருத்தி படிப்படியான அனுதின வாழ்க்கையின் வேலை

கிறிஸ்தவ குணலட்சணத்தை வளர்க்கும் விஷயத்தில் நாம் எப்படி தொடர்ந்து செயல்படுவது என்பது குறித்து அப்போஸ்தலர் பேதுரு நமக்கு கூறுகிறதாவது:

இவையெல்லாவற்றையும் ஒரு நாளிலோ அல்லது சில நாட்களிலோ செய்ய முடியாது. ஆனால் அது படிப்படியாக, அனுதின வாழ்க்கையின் வேலையாக ஒழுக்கத்தின் மேல் ஒழுக்கம், கிருபையின் மேல் கிருபையை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் கூட்டுதலாக இருக்கிறது. அவர் கூறுகிறதாவது: "நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்." மேலும் அவர் கூறுகிறதாவது: "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை." (2பேதுரு 1:5-7. 10)

இவைகளைச் செய்தால் தேவனால் அங்கீகரிக்கப்படுவது நிச்சயம் என்பது ஒரு பலமான உறுதிமொழியாக இருக்கிறது. ஆகையால் இவைகளை ஜாக்கிரதையுடன் கவனித்தால் நாம் நன்கு செய்வோம். நாம் கிறிஸ்தவ குணலட்சணத்தில் வளர்வதற்கு இங்கே எட்டு மூலப் பண்புகள் இருக்கின்றன. புது சிருஷ்டியின் கரு உருவாகும் வரை இந்த மூலப்பண்புகள் ஒன்றொடொன்று புதுசிருஷ்டியின் ஆவிக்குரிய ஜீவ அணுவினால் கூட்டப்பட வேண்டும். அதன் பிறகு புது சிருஷ்டியானது வளர்ந்து அபிவிருத்தி அடைய தொடர வேண்டும். அவைகளை மறுபடியும் கவனிப்போம். அவையாவன:

1. விசுவாசம்
2. தைரியம்
3. ஞானம்
4. இச்சையடக்கம்
5. பொறுமை
6. தேவபக்தி
7. சகோதர அன்பு
8. அன்பு

### "கர்த்தர் கூறியதாவது" என்பதே எல்லா சர்ச்சைக்கும் முடிவாக இருக்க வேண்டும்

இப்பொழுது நாம் ஒரு சிறு சுய பரிசோதனை செய்வோம். ஒவ்வொருவரும் தன்னைக் கேட்டுக்கொள்வாராக.

(1) அப்போஸ்தலர் இங்கே குறிப்பிடுகிற விசுவாசத்தை நான் பெற்றிருக்கிறேனா; ஒவ்வொரு பொருளிலும் அல்ல ஒவ்வொரு மனிதரிடமும் அல்ல, தேவனிடம் இருக்கிறதா? கிறிஸ்து பிறர் பொருட்டு செய்த பலியின் மூலம் அவரது இரட்சிப்பின் திட்டத்தில், உறுதியான அஸ்திவாரத்தில் கட்டப்பட்ட அவரது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் விசுவாசத்தை பெற்றிருக்கிறேனா? நான் அவரில் மறைமுகமாக நம்பிக்கை வைத்திருக்கிறேனா? "கர்த்தர் கூறியதாவது" என்பது எல்லா சர்ச்சைகளுக்கும் முடிவாக இருக்கிறதா? எல்லா சந்தேகங்களுக்கும் குழப்பங்களுக்கும் தீர்வாக இருக்கிறதா?

(2) நான் ஒரு நல்லொழுக்கமுள்ள வாழ்க்கைக்காக முயற்சிக்கிறேனா? இது தேவனுடைய பிள்ளைக்கு, ஜீவபலியாக அர்ப்பணம் செய்தவர்களுக்கு, தீமையிலிருந்து விலகியிருப்பதைக் காட்டிலும் மேலானதைக் குறிக்கிறது. அது உண்மையாக வாழ்வதை அதாவது அவரது உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதைக் குறிக்கிறது. அதை தெரிந்தே மீறினால் அது தவறாக உறுதிமொழி எடுத்ததைக் குறிக்கும். அது நீதியில் குணலட்சண பலத்தை, வலிமையைக் குறிக்கிறது. குற்றமற்ற நேர்மை, நீதி, சத்தியம் தரநிலையாக இருந்து, அது தேவனுடனும் சக மனிதர்களுடனும் நேர்மைத் தன்மையை வளர்ப்பதைக் குறிக்கிறது.

சங்கீதக்காரன் இது குறித்து கூறுகிறதாவது: "உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதார பேசுகிறவன் தானே. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்கு தீங்கு செய்யாமலும், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான். ஆகாதவன் அவன் பார்வைக்கு தீழ்ப்பானவன்; கர்த்தருக்கு பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான். ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான். தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை." (சங்கீதம் 15:2-5) இப்படிப்பட்டவர் நல்லொழுக்கம் உள்ளவராக, பலமான அல்லது திடமான குணலட்சணம் உடையவராக இருக்கிறார். இங்கே தெய்வீக உதவியை வேண்டிக்கேட்பது எவ்வளவு அவசியமாக நமக்கு இருக்கிறது! எப்படி நம்மை நாமே நிதானித்து அறிவது!

(3) தேவனைப் பற்றியும், அவரது வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பற்றியும் இப்பொழுது செயல்பாட்டில் இருக்கும் விசேஷித்த அம்சங்கள் குறித்தும் முழுமையான அறிவைப் பெறுவதற்காக அனுதினமும் நான் முயற்சிக்கிறேனா? அதை நிறைவேற்றுவதில் நான் அவருக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறேனா? என்னுடைய சித்தம் மற்றும் பண்பை பொருட்படுத்தாமல் நான் நிற்கிற குறிப்பிட்ட உறவு மற்றும் நிலைமையில் என்னைப் பற்றிய அவரது சித்தத்துக்கு ஒத்துழைக்கிறேனா? பரிசுத்த ஆவியினால் அவரது வசனத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டபடி நம்மைக் குறித்த அவரது நீதியான சித்தம் மற்றும் தேவனைப் பற்றிய இந்த அறிவைப் பெற முயற்சிக்கிறேனா? இந்த தெய்வீக அறிவை புறக்கணிப்பது, நமது சொந்த அபூரண நீதியின் தரநிலையை ஏற்படுத்துவதற்கு சமமாக இருக்கிறது. மேலும் தெய்வீக தரநிலையை அசட்டை பண்ணுவதாக இருக்கிறது.

(4) புசிப்பதிலும் குடிப்பதிலும், குடும்ப ஏற்பாடுகளிலும், நடக்கை, எண்ணம் வார்த்தை மற்றும் கிரியையிலும் சுயகட்டுப்பாட்டை அப்பியாசப்படுத்தி நான் நிதானமானவாக இருக்கிறேனா? சுயக் கட்டுப்பாடு என்பது நல்ல குணலட்சணத்தின் ஒரு மூலகமாக இருக்கிறது என்பதை நான் உணருகிறேனா? "பட்டணத்தை பிடிக்கிறவனை பார்க்கிலும் தன மனதை அடக்குகிறவன் உத்தமன்" என்பது ஞானவானின் ஆலோசனையாக இருக்கிறது. அநேக வெற்றி படைத்தலைவர்கள் தங்களை கட்டுப்படுத்தி ஜெயங்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சுய

கட்டுப்பாடு என்பது நமது மனோபாவம், சிந்தைகள், சுவைகள், பசி தாகம், உழைப்பு, சந்தோஷங்கள், வருத்தங்கள் மற்றும் நம்பிக்கைகளை சார்ந்தே இருக்கிறது. ஆகையால் அதை வளர்ப்பது குணலட்சண அபிவிருத்தியின் உயர்ந்த நிலையாகும். உன்னதத்திலிருந்து வரும் அறிவு, வலிமை, விசுவாசம் ஆகியவற்றுடன் இணைந்த சுய கட்டுப்பாடு, தெய்வீக காரியங்களில் அதிகப்படியான வைராக்கியம் மற்றும் கிரியையையும் பூமிக்குரிய காரியங்களில் அதிகப்படியான நிதானத்தையும் குறிக்கிறது. நிதானித்தலில், நடத்தையில், உலக காரியங்களில், "உங்கள் சாந்த குணம் (நிதானம், சுயகட்டுப்பாடு எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக." (பிலிப்பியர் 4:5) வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் நமது நிதானம், ஜாக்கிரதை, மரியாதையுடனான நடத்தையும் நமது உத்தியோகத்தை கனப்படுத்துகிறோம் என்பதும் தெரிந்திருப்பதாக.

(5) எனது உணர்வுகளை அறிவொளியின் காரணத்தினால் கட்டுப்பாட்டில் வைத்து, குணலட்சணத்தை வளர்ப்பதில் பொறுமையானது கிரியை நடப்பித்து சோதனையிலும் கட்டுப்பாட்டிலும் பொறுமையுடன் இருக்கிறேனா? அவை இருதயத்தின் ஆழத்தை உழுது புண்படுத்தினாலும் எல்லா காரியங்களிலும் ஒழுங்கை கடைபிடிக்கிறேனா? சீக்கிரத்தில் ஸ்தாபிக்கக்கூடிய தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு இடத்திற்காக என்னை தயார்படுத்தும் வேலைக்கு என்னை அவரது கைகளில் சந்தோஷத்துடன் ஒப்புக்கொடுக்கிறேனா? பொறுமை என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைக்கு சந்தோஷத்துடன் சகித்தல் என்றுபொருள்.

(6) என்னுடைய குணலட்சணத்தையும் நடவடிக்கையின் போக்கையும் தெய்வீக மாதிரியில் உருவேற்படுத்த நான் ஜாக்கிரதையாக கவனித்து முயற்சிக்கிறேனா? ஒரு பெற்றோராக அல்லது வேறு எந்த நிலையிலும், தேவன் தமது அதிகாரத்தை பயன்படுத்துவது போல, சுயநல நோக்கத்திற்காகவோ அல்லது பெருமைக்காகவோ அல்லது எந்த வகையிலும் நமக்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறவர்களை ஒடுக்கவோ, நசுக்கவோ செய்யாமல், அவர்களது ஆசீர்வாதத்திற்காகவும் நன்மைக்காகவும் சுயதியாகம் வரை சென்று பொறுமையுடன் கண்ணியத்துடனும், கிருபையுடனும் கொடுங்கோன்மை இல்லாமல் செய்கிறேனா?

ஒரு குமாரனாக அல்லது அதிகாரத்துக்கு கீழ்ப்பட்டவராக இருந்தால், நமது பிரியமான கர்த்தர் முன்மாதிரியாக காண்பித்தது போல அன்புடன் கீழ்ப்படிகிறேனா? எந்த விலை கொடுத்தாவது பிதாவானவரின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவருக்கு பிரியமானதாக இருந்தது. ஒரு மனிதனாக இந்த உலகின் ராஜ்யத்துக்கும் அதிகாரிகளுக்கும் ஒரு வாலிபனாக பூமிக்குரிய பெற்றோர்களின் அதிகாரத்துக்கும் அவர் உண்மையுள்ளவராயும், விசுவாசமுள்ளவராகவும் இருந்தார். அவர்கள் அவரது மேலான அதிகாரிகளாக இருந்தாலும், இந்த பூமிக்குரிய அதிகாரம் சரீர பிரகாரமாக அவரை விட தாழ்ந்தவர்களால் கையாளப்பட்டது. வாழ்க்கையில் நாம் எப்படிப்பட்ட ஸ்தானத்தை நாம் பெற்றிருந்தாலும் அதை கிருபையுடன் நிறைவு செய்கிறவர்களாயிருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! நாம் ராஜகுமாரர்களாக அல்லது விவசாயிகளாக, எஜமானர்களாக, சேவகர்களாக இருந்தாலும் நாம் ஜாக்கிரதையாக தெய்வீக சாயலை பின்பற்றுவது எவ்வளவு அழகாக இருக்கிறது!

(7) சகோதர அன்பு என்னுடைய சகல கிரியைகளையும் வகைப்படுத்துகிறதா? அது பரம்பரையாக வந்த மற்றவர்களது பலவீனங்கள் மற்றும் சூழ்நிலை துரதிஷ்டங்களுக்கு தேவையான அளவு சலுகையை அனுமதிக்கிறதா? சகோதர அன்பு இந்த தவறுகளை சரி செய்ய ஞானத்துடன் சுய விருப்பத்தையும் விட்டுக்கொடுத்து தேவைப்பட்டால் கவனத்துடன் செயல்படுகிறதா? என் முகத்தை நிதானமாக கவனித்து குணலட்சண சிதைவை நான் உணர்ந்தால், ஒரு சகோதரனுடைய உதவியை நன்றியுடனும் அவரது கண்டனத்தை அடக்கத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறேனா? இப்படிப்பட்ட மனோபாவத்தை தேவனுடைய கிருபையினால் நான் மேற்கொண்டு, எனது ஜீவனை கொடுக்க நேர்ந்தாலும், நான் மற்றவர்களுக்கு தடையாக இல்லாமல் உதவியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுவேனா? இனிமேலும் எனது பழைய குணலட்சணத்தை வளர்க்காமல் தேவனுடைய ஊழியத்தில் மும்முரமாக ஈடுபட்டு, ஊழியத்தில் நான் தடையாக இல்லாமல் முழு ஒத்துழைப்பைத் தருவேனா?

(8) நான் அநீதிமான்களிடத்திலும், அன்பற்றவர்களிடத்திலும் அதே சமயம் நல்லவர்கள் மற்றும் அழகானவர்களிடத்திலும் நான் அன்புடன் இருக்கிறேனா? அந்த அன்பு பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் உதவி புரியும் செயல்பாடுகளில் ஞானத்தை வெளிப்படுத்த எப்பொழுதும் தயாராயிருக்கும். அந்த அன்பு, இரக்கம், உதவி, ஆறுதல்கள், சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை முடிந்தவரை கொடுக்கிறது. அது வரவிருக்கிற யுகத்தில் மாபெரும் சந்தர்ப்பங்களையும் வல்லமை மற்றும் மகிமையை விரும்புகிறது. அது விசேஷமாக உலகளாவிய ஆசீர்வாதத்தை விரும்புகிறது. அதே முடிவின் நிறைவேறுதலுக்காக தெய்வீக திட்டத்திற்கு இசைவாக ஒவ்வொரு தற்கால சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துகிறது. அது வருகிற யுகத்தில் ராஜாவின் அமைச்சரவையை அமைக்கிற மகிமையான கூட்டத்தில் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் காணப்பட வேண்டியதாக, வளர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த குணலட்சணங்கள் இங்கே ஆரம்பிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படவில்லையென்றால் அங்கே அந்த அதிகாரத்துக்கு தகுதியுள்ளவர்களாக கருதப்படமாட்டோம்.

ஒரு பழத்தோட்டத்தில் கிளைக்கழித்தல், கத்தரித்தல் மற்றும் பண்படுத்துதல் ஆகியவை கனிகளை அதிகம் கொடுக்க தேவைப்படுவது போல, கவனிப்பும், தேவையான முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளும் குணலட்சண சிதைவு மற்றும் அழிவு ஏற்படாதபடி அவசியமாயிருக்கின்றன. புதுசிருஷ்டியின் ஜீவனையும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. நாம் எதிர்த்தால் பிசாசு நம்மை விட்டு ஓடுவான். பொறுமையுடன் நன்மைகளை தொடர்ந்து செய்தால் அதிக அளவான முன்னேற்றம் பெறுவோம். “இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் (அதாவது இவைகளை ஓரளவுக்கு பெற்றிருந்து, வளர்த்துக் கொண்டேயிருந்து அவை உங்களை ஆளும்படி செய்தால்) உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க -வொட்டாது.” சத்தியம் இப்படியாக இருக்கிறது.“நீதிமானுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது.” அவர்கள் அதை நிச்சயமாக பெறுவார்கள். அவர்கள் இருளில் நடக்கமாட்டார்கள். “ஒருவன் தேவனுடைய சித்தத்தை செய்தால், சத்தியத்தை அறிவான்.” (யோவான் 7:17) “இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப் போன குருடனாயிருக்கிறான்.” (2 பேதுரு 1:9)

## இவை எல்லாவற்றிலும் ஜாக்கிரதையாக இருப்போமாக

“ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் (இந்த குணலட்சணங்களை வளர்த்தால்) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.” உங்களது இரட்சிப்பு மற்றும் பரிசுத்தமாகுதலுக்கு, (உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணம்) கிறிஸ்துவின் பலியின் மேலுள்ள விசுவாசத்தினால் முழுவதுமாக நீதிமானாக்கப்பட்டு, நீங்கள் அழைக்கப்பட்ட கனம், மகிமை மற்றும் சாகாமை நிலைமைக்கு உறுதிப்படுத்தப்படும். “இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.”

மறுபடியும் நமது பிரியமான சகோதரர் பேதுரு கூறுகிறதாவது: “இதனிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்... இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயமென்று எண்ணுகிறேன்.” பேதுரு இதை செய்தார். இந்த காலத்தில் சபையானது அவரது சகோதர ஆலோசனையினால் பலனடையும்.

அப்போஸ்தலர் பேதுரு அர்ப்பணம் செய்தவர்களிடம் பேசும் போது, நாம் எப்படி, தேவனுடைய பிரதான கிருபையாகிய நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும் காரியங்களை வெளிப்படையாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலர் பவுலும் அதே வகுப்பாரிடம் பேசும் போது, கிறிஸ்தவ குணலட்சணத்தை வளர்த்து அபிவிருத்தி செய்வதில் தொடர்ச்சியான புறக்கணிப்பு இழப்பை, பரம அழைப்பின் பிரதான சலுகையை மாத்திரமல்ல, முடிவாக எல்லா சலுகைகளையும் இழக்க வேண்டியிருக்கும். அவர் எழுதுகிறதாவது: “நீங்கள் (தீமையை அழிப்பதற்கு, தேவனுடைய ஊழியத்திற்காக புனிதமான பலியின் உடன்படிக்கைக்குள் சென்று) மாம்சத்தில் பிழைத்தால் (சுய முயற்சியினால், சுயத்தை சந்தோஷப்படுத்துவதற்கு) சாவீர்கள்.” (ரோமர் 8:13) சத்திய அறிவிற்குள்ளும் அவரது சித்தத்திற்கும் கொண்டு வரப்பட்டு, உண்மையுடன் உடன்படிக்கை செய்தவர்கள் வேண்டுமென்றே அதை முறிக்கிறவர்களாகவும் மீறுகிறவர்களாகவும் ஆனவர்களை தேவன் பயன்படுத்தவோ, ஒரு இடத்தை கொடுக்கவோ மாட்டார்.

நமது தற்கால நிலைமையில் நமது எல்லா முயற்சிகள் மற்றும் விழித்திருத்தல் மூலம் நமது முழுமையை அடைய முடியாது. பூரணத்தை இந்த வாழ்க்கையில் ஓரளவுக்கு மட்டுமே அடைய முடியும். அதை அடைவதற்கான நமது முயற்சியின் அளவு நமது விசுவாசம் மற்றும் ஆர்வமுடனான விரும்பத்தின் அளவை நிரூபிக்கும். அந்த முயற்சி பிரயோஜனமில்லாமல் இருக்காது. கனி உண்டாகவில்லை என்றால் பயிர் செய்தல், கிளைக் கழித்தல் முதலானவை சரியானபடி செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்தவ குணலட்சனைகளை அபிவிருத்தியினால் மட்டுமல்ல, கிரியைகளை அதிகப்படுத்துவதினாலும் கனிகள் தோன்றும். தேவனுடைய ஊழியத்தில் நம்முடைய கிரியைகளை ஆரம்பிக்கும் முன்னதாக, உயிர்த்தெழுதலில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அழியாமையுள்ள சரீரத்திற்காக காத்திருக்கக்கூடாது. நாம் அந்த புது சிருஷ்டியின் ஆவியை பெற்றிருப்போமானால் (சித்தத்தை, பண்பை) நமது அழிவுக்குரிய சரீரம் தற்போது தேவனுடைய சத்திய ஊழியத்தில் சுறுசுறுப்பான செயலில் இருக்கும். நமது கால்கள் அவரது செய்திகளை எடுத்துச் செல்ல விரையும்; நமது கைகள் அவரது கட்டளைகளை விரைந்து செய்யும்; நமது நாவு சத்திய சாட்சியத்தை கூற தயாராக இருக்கும். நமது சிந்தை அபரிமிதமாகவும் திறம்பட அதிகமதிகமாக செய்யும் வழிகளையும் உபாயங்களையும் திட்டமிடும். இப்படியாக அந்தகாரத்தினின்று அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருக்கு கனத்துகுரியவர்களாக இருப்போம்.

R4809

# KEEPING THE BODY UNDER
# சரீரத்தை கீழ்ப்படுத்துதல்

"ஆகையால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன்."1 கொரிந்தியர் 9:26

பரிசை எது அமைக்கிறது என்பது குறித்து அப்போஸ்தலர் பவுல் திட்டவட்டமான அறிவை பெற்றிருந்தார். அவர் அது குறித்து நிச்சயமில்லாதவராக இல்லை. அவரிடத்தில் இதுவா அல்லது அதுவா என்ற சந்தேகமேயில்லை."கிறிஸ்துவுக்குள் பரம அழைப்பு" என்பது அவருடன் சுதந்தரர்கள் என்பதையும், அவரோடு பாடுபட்டால், அவருடன் மகிமையில் இருப்போம் என்பதையும் பரிசுத்த பவுல் அறிந்திருந்தார்.ஓட்டத்திற்கான நிபந்தனைகளையும் பற்றி அப்போஸ்தலர் நிச்சயமற்றவராக இல்லை. அவைகள் மரண பரியந்தம் இருக்கும் என்பதையும் ஜீவனை இரட்சித்துக்கொள்ள விரும்பினால் அதை இழக்க வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். அவரது தீர்மானத்தைக் குறித்து அவர் நிச்சயமற்றவராக இல்லை. அவர் நுழைந்திருந்த மார்க்கத்தை நிச்சயமாக அறிந்திருந்தார். "சில சமயம் இப்படியாக செய்வேன், என்று நம்புகிறேன்" என்று சொல்கிறவர்களைப் போல அவர் இல்லை. அவர் பலியின் உடன்படிக்கையை மரணபரியந்தம் செய்திருந்தார்.

அப்போஸ்தலர் பரிசை பெறும் சந்தர்ப்பத்தில் நிச்சயமில்லாதவராக இல்லை. தேவனுடைய நல்ல சந்தோஷத்துக்கு இசைவாக விரும்பவும் செய்யவும் அது அவருடனேயே இருந்தது என்பதை அவர் அறிவார். இந்த ஓட்டத்தில் முடியாதது ஒன்றும் அவருக்கு தேவையானதாக இருக்கவில்லை. ஓட்டத்தில் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளில் "ஏற்ற சமயத்தில் சகாயம் பெறும் கிருபையும்" சேர்க்கப்பட்டிருந்தது என்பதையும் இந்த கிருபையும் உதவியும் கர்த்தரிடத்திலிருந்து வரும் என்பதையும் அறிந்திருந்தார். ஆகையால் இந்த பந்தய சாலையின் ஓட்டப்பந்தய வீரர்களுக்கு நிச்சயமின்மை என்பது ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கிடையாது.

இப்படியாக மாபெரும் இரட்சகரின் வழி நடத்தும் கண்ணின் கீழாக இருக்கும் அனைவருக்கும் இருக்கும். நாம் ஒவ்வொருவரும் நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவோம். "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2 பேதுரு 1:10,11)

### "என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்"

மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற அவரே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, தன் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துவதாக அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். "…. நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." (1கொரிந்தியர் 9:27) இதை ஒருவர், "நான் என் உடலை துடிக்க வைக்கிறேன்" என்று மொழிபெயர்க்கிறார். அதாவது என் சரீரத்தில் கட்டாய நடவடிக்கைகளை எடுக்கிறேன்.

சரீரமானது ஆரம்பத்தில் சுபாவ மனிதனுக்கும் சுபாவ சித்தத்திற்கும் உரியதாக இருந்தது. பழைய சித்தத்திற்கு பதிலாக புதிய சித்தம் வந்த போது, புதிய சித்தம் சரீரத்தின் சொந்தக்காரனது. புதிய சித்தம் சரியானபடி பழைய சரீரத்தினால் ஊழியம் கொள்ள முடியாது. ஏனெனில் புதிய சித்தம் பூரணமானது. பழைய சரீரம் அபூரணமானது. புதிய சித்தம், தேவனுடைய சித்தம், கிறிஸ்துவின் சித்தம் அழியக்கூடிய சரீரத்தை பொறுப்பெடுக்கும் போது, அது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. சித்தம் சரீரத்துக்கோ, சரீரம் சித்தத்திற்கோ ஒத்துப் போவதில்லை. ஆகையால் புதிய சித்தத்தின் வேலை, கர்த்தருக்கு கீழ்ப்படிதலையும் தெய்வீக சித்தத்துக்கும் உண்மைத் தன்மையையும் காண்பிப்பதாகும். சில சமயம் சரீரமானது வெட்கக்கேடாக மதிக்கப்பட்டாலும் அதன் தேவைகள் புறக்கணிக்கப்படும்.

இப்படியாக நாம் அனைவரும் சரீரத்தை இழிவுபடுத்தி துடிக்க வைத்தது மட்டுமில்லாமல் அதைக் கீழ்ப்படுத்த வேண்டும். "இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்." (ரோமர் 8:17) கர்த்தரிடமிருந்து வருகிற பரிசுத்த ஆவி நம்மை அவருடைய சித்தத்திற்கு இசைவாக வாழவும், நமது அழிவுக்குரிய சரீரத்தை உயிர்ப்பித்து சத்திய ஊழியம் செய்யும்படியும் பண்ணுகிறது.

நாம் இரண்டு ஜீவிகள் அல்ல, ஒரே ஜீவி தான். நாம் ஒரே சமயத்தில் இரண்டு ஜீவிகளாக இருக்க முடியாது. பழைய சிருஷ்டி தாழ்ந்து மறுரூபமாகும் வரை நாம் இப்படித்தான் இருக்க வேண்டும். சித்தத்தை பொறுத்தவரை, நாம் புது சிருஷ்டியாகும் போது, அதிலிருந்து புது சிருஷ்டியாகவே இருக்கிறோம். ஆனால் புது சிருஷ்டியானது அதன் புது சரீரத்தை இன்னும் பெறவில்லை. அப்போஸ்தலர் புது சிருஷ்டியை புது மனிதன் என்று வெளிப்படையாக குறிப்பிடுகிறார். உலகம் தனிப்பட்ட மனிதன் என்று நினைக்கிற வெளியரங்கமான மனிதன் இருக்கிறான். ஆனால் வெளியரங்கமான மனிதன் கீழ்ப்படிதலுக்கும் ஊழியத்துக்கும் கொண்டு வரப்படும் போது, புது சிருஷ்டியானது மானிட சரீரம் மரிக்கும் வரை, வளர்ந்து பலமடைகிறது. தேவன் புது சிருஷ்டிக்கு உயிர்த்தெழுதலில் புது சரீரத்தைக் கொடுக்கிறார். பிறகு புது சிருஷ்டியானது அவருடைய ரூபத்தில் காணப்படும் போது திருப்தியடைகிறது.

மாம்சீக சரீரமானது மரித்ததாக கருதப்படுகிற நிலைமையிலிருந்து எழும்பக்கூடிய சுபாவம் இருக்கிறது. ஆகையால் புது சிருஷ்டியின் நல்ல விசுவாசம் போராட்டத்தில் தொடர்ச்சியான காவல் தேவைப்படுறது. மாம்சத்திற்கெதிரான புதிய சிந்தையின் போராட்டங்கள், "நல்ல போராட்டமாக" இருக்கின்றன. அதாவது அது பாவத்திற்கும் விழுந்துபோன சுபாவத்தின் பலவீனங்களுக்கும் எதிரான போராட்டமாக இருக்கிறது. புது சிருஷ்டியின் முழு மார்க்கமும் விசுவாச மார்க்கமாக இருக்கிறது. வாக்குத்தத்தங்களிலும் கர்த்தரை தனது உதவியாளராகவும் விசுவாசித்தால் ஒழிய, மாம்சத்திற்கெதிராகவும் அதன் முன்கணிப்பு மற்றும் விருப்பங்களுக்கெதிராகவும் போராடுவது இயலாததாகிவிடும்.

### அப்போஸ்தலருக்கு பின்வாங்கிப்போவது குறித்த எண்ணமே இல்லை

பரிசுத்த பவுல் கூறுகிற இன்னொரு பகுதியானது: "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாக காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம்." (எபிரேயர் 4:1) அவருக்கு பின்வாங்கிப் போவது குறித்த எண்ணமே இல்லை. ஆனால் அவர் எழுதும் போது "நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படி" வலியுறுத்துகிறார்.

சித்தத்தை முழுவதுமாக சரியானபடி அர்ப்பணம் பண்ணுவதும், கர்த்தரின் ஊழியத்திற்கு சிந்தையின் ஒவ்வொரு சக்தி, திறமை மற்றும் சரீரத்தையும் அர்ப்பணம் பண்ணுவதுமே, விழுந்துபோன சுபாவத்தின் பலவீனங்களை மேற்கொள்வதற்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும். கர்த்தரிடம் அவனது அர்ப்பணத்தை குறித்தும் கர்த்தரின் சேனையில் சேர்வது குறித்தும் சரியான பார்வை உடையவர்கள் கர்த்தருக்கு கொடுப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை என்பதை உணருவார்கள். சித்தத்தின் போராட்டம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், கர்த்தருக்கு தன்னை ஒப்புக்கொடுக்க முடிவாக தீர்மானிக்கும் போது எல்லாம் முடிவடைந்துவிடும். ஆகையால் மரண பரியந்தம் ஊழியம் மற்றும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்திலிருந்து பின்வாங்கவும் நிறுத்தவும் இடமேயில்லை என்பதையும் உணருவது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது!

போதனைக்காகவும் ராஜ்யத்துக்கு தயார்படுத்தவும் கிறிஸ்துவின் பள்ளியில் நுழைந்திருப்பது பழைய சிருஷ்டியாகிய மாம்சம் இல்லை என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை." (1கொரிந்தியர் 15:50) ஆவிக்குரிய சுபாவத்திற்காக தெய்வீக அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ளுவது என்பது பூமிக்குரிய சுபாவத்தை துறப்பது மாத்திரமல்ல. "தேவனுடைய புத்திரர்களாக," புது சிருஷ்டியாக ஜெனிப்பித்தலும் ஆகும். புது சிருஷ்டி, புது சித்தம், பூரணப்படுத்தப்படவும், தெய்வீக சித்தத்துக்கு இசைவாக கொண்டு வரப்படவும், கர்த்தருடைய சாயலாக ஆகவும் கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறது. நமது மாம்சத்தை தெய்வீக பிரமாணத்துக்கு இசைவாக கொண்டு வரவே முடியாது. ஏனெனில் அதன் அபூரணம் பரம்பரையாக வந்தது. ஆகையால் அது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. தனது மாம்சத்தை பூரணப்படுத்த வேண்டும் என்று பார்க்கிறவன், தனது விசுவாசத்தை அதில் வைக்கிறவன் கிறிஸ்துவின் ரூபத்தை அடைவதோ, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வகுப்பாராக ஆவதோ, "அவரது குமாரனின் சாயலாக ஆவதோ கூடாத காரியம்." (ரோமர் 8:29)

**"செய்யக்கூடாததை செய்கிறோம், செய்யவேண்டியதை செய்யாமல் விட்டுவிடுகிறோம்"**

விசுவாசத்திலும் அர்ப்பணத்திலும் கர்த்தருடன் இணைகிறவர்கள் பட்டதாரியாகவும் சுதந்தரராகவும் அல்லாமல் மாணவனாகவும் சீஷனாகவும் அறிவித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை சுதந்தரித்துக் கொள்ள ஆயத்தமாக விரும்புகிறார்கள்." (1கொரிந்தியர் 2:9) இந்த எண்ணம் இந்த விஷயத்தில் தெய்வீக போதனையாக மனதில் வைக்கப்பட்டால் செய்யக் கூடாதவைகளை செய்யாமலிருக்க தவிர்க்க இயலாத போதும், செய்யக்கூடியவைகளை செய்யாமல் விட்டுவிடும் போதும், நமது அதைரியத்தை தடை செய்யும். (ரோமர் 7:15; 18, 19,25)

புதிய சிந்தையானது, கிறிஸ்துவின் சிந்தையின் சாயலுக்கு அபிவிருத்தி அடைகிற அளவுக்கு, மாம்சத்தின் சித்தத்தை மரித்த நிலையில் வைக்கவும் சரீரத்தை பாவ இயக்கங்களுக்கு கீழ்ப்படுத்தாதிருக்கவும் முயற்சிக்கும் என்று நாம் குறிப்பிடுவது அவசியமற்றது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய புத்திரர், தனது அழிவுக்குரிய மாம்சத்தை பாவமானது ஆளுவதற்கு நிச்சயமாக அனுமதிக்க முடியாது. பாவமானது ஏதோ ஒரு அளவுக்கு கட்டுப்படுத்தும். ஆனால் விருப்பத்துடன் அல்ல. புது சிந்தை, புது சிருஷ்டியானது மாம்சம் எழும்புவதை பார்த்த சிறிது நேரத்தில், கிறிஸ்துவாகிய பரலோக களஞ்சியத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சகாயம் செய்யும் கிருபையை பெற்று அதை ஜெயங்கொள்ளும். இந்த கருத்து சரியானபடி ஊக்குவிக்கப்பட்டால், உண்மையான சீஷர்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளுவதற்கும், மாம்சத்தின் தவற்றினால் முற்றிலுமாக தூக்கி ஏறியப்படாமல் இருப்பதற்கும அவர்களது இருதயங்களை பாவத்திற்கும் அநீதிக்கும் அனுதாபம் காண்பிக்கவில்லை என்று உணரும் வரை உதவி செய்யும். ஆனால் மாறாக, நமது போதகரின் போதனைகள் மற்றும் கொள்கைகளும் முழு அனுதாபத்துடன் இருந்து, அவருடைய பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படுபவராகவும் பரிசுத்தமாக்கப்பட விருப்பம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். இந்த கருத்து, இந்த பள்ளியில் மாணவர்களாக, சீஷர்களாக, மாம்சத்தின்படியல்ல ஆவியின் சிந்தையின்படி புது சிருஷ்டிகளாக இருப்பவர்களுடன் அன்பை அப்பியாசப்படுத்த உதவுகிறது. ஆகையால், சகோதரர்களின் மாம்சத்தில் கறைகளைக் கண்டால், அவர் பார்க்கிற தீங்கு, சகோதரர் அல்ல, புது சிருஷ்டி அல்ல அவரது சகோதரரின் எதிரி என்பதை ஞாபத்தில் வைக்க வேண்டும். அப்படியிருக்குமானால் அவரது இருதயம், அவரது சித்தம் கர்த்தருக்கும் அவரது அன்பின் பிரமாணத்திற்கும் இணக்கமாக இருக்கிறது. மேலும் அவர் அனுதினமும் மாம்சத்தின் பலவீனங்களுக்கு எதிராக நல்ல போராட்டத்தை போராட நாடுகிறார்.

**அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறான்**

இந்த காரியத்தை நாம் ஆராயும் போது இரண்டு உண்மைகளை நாம் மனதில் வைக்க வேண்டும். (1) வேத வாக்கியங்கள் புது சிருஷ்டியிடம் பாவத்தை காண்பதில்லை. (2) நமது விழுந்து போன மாம்சத்தில் நீதியின் பரிபூரணம் இலலை. புது சிந்தையால் குறிப்பிடப்படுகிற, தேவனுடைய ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகிய புது சிருஷ்டி (அதன் மாம்சம் மரித்ததாக கருதப்படுகிறது)பாவம் செய்ய முடியாது. ஏனெனில் அதன் சாரம், பாவத்திற்கு எதிரான சத்திய ஆவியினால், வித்து அல்லது ஜீவ அணுவினால் பதிக்கப்பட்டது. இந்த புது சிருஷ்டியானது நீதியுடன் முழுவதும் இணக்கமாக இருக்கிறது. பரிசுத்தத்தின் ஆவியாகிய கர்த்தருடைய ஆவியினால் முழுவதுமாக புகுத்தப்பட்டிருக்கிறது. அது பரிசுத்தத்தில் சந்தோஷப்படுகிறது. பாவத்தில் அல்ல. இப்படியிருந்தால் இந்த ஜெனிப்பிக்கப்பட்ட அல்லது பரிசுத்த ஆவியின் நிலை தொடரும். "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். (விருப்பத்துடன் பாவத்தை அங்கீகரிக்கவோ அல்லது சந்தோஷப்படவோ மாட்டான்;) ஏனெனில் அவனது வித்து அவனில் தரித்திருக்கிறது." (அவன் ஜெனிப்பிக்கப்பட்ட சத்திய ஆவியினால், சத்தியத்தின் பரிசுத்த வித்தினால்); "பொல்லாங்கன் அவனைத் தொடான்." (1யோவான் 3:9; 5:18)

நம்மை சூழ்ந்திருக்கும் ஒவ்வொரு சோதனையும் கஷ்டங்களும் பிசாசினால் உண்டாது என்று யூகிக்கக்கூடாது. அப்போஸ்தலர் வார்த்தையை நினைவு கூருவது நல்லது; "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்." (யாக்கோபு 1:14) இப்படிப்பட்ட சோதனைகள் மாம்சத்தினுடையதாக, நாம் விழுந்துபோன இடத்தின் அங்கங்களாக இருப்பதின் பலனால் வந்தன. அதன் பலவீனங்களும் அபூரணங்களும் கடந்த, ஆறாயிரம் வருடங்களாக சேர்க்கப்பட்டு தீவிரமடைந்தன. ஆகையால்

நமது பிரதானமான சத்துரு, நமக்கு இயற்கையாக வந்த பலவீனங்களும் நாம் முன்னரே தீர்மானித்த சுய நலம், இழிவு மற்றும் பாவம் என்பதை நாம் உணர வேண்டும்.

"கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற" (எபேசியர் 2:2) சாத்தானின் கருவிகளின் மூலம் உலகமானது சுயநல ஆவியின் கட்டுப்பாட்டின் கீழ் இப்படியாக இழிவு நிலைக்கு சென்றிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்கு உலகமானது எதிரியாகவும் ஒரு சோதனையாளராகவும் ஆகியிருக்கிறது. காரணம் நாம் (சபை) புதிய நம்பிக்கைகள், புதிய லட்சியம், புதிய அபிலாஷைகள், புதிய விருப்பங்களுக்காக "மறுபடியும் ஜெனிப்பிக்கப் பட்டிருக்கிறோம்." அவை உலகத்தின் அனுதாபம் உடையவற்றிலிருந்து மாறுபட்ட திசையில் இருப்பவை.

**மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இருக்கிறது**

நம்முடைய பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலானது பரிசுத்த ஆவியினுடையதாகவும் அதன் போக்கு, நீதிக்கும் அன்பிற்கும் இணக்கமாக ஆவியினுடையதாகவும் பரலோகத்திற்கு உரியதாகவும் இருக்கிறது. இப்படியாக நமது இருதயம் மட்டுமே மாற்றப்பட்டிருக்கிறது. நமது மாம்சம் உலகத்திற்கு இணக்கமாகவே இருக்கிறது. அது கிறிஸ்துவின் மூலமாக சத்தியம் மற்றும் சித்தத்தின் மூலமாக நமது இருதயங்களில் நிறுவப்பட்ட புதிய முறைமைகளுக்கு மாறானதாகவே இருக்கிறது. இதன் விளைவாக, உலகமானது, அதன் பிள்ளைகளின் வார்த்தை, எழுத்துக்கள் மூலமாக கர்த்தருடைய பிள்ளைகளோடு தொடர்புக்கு வரும் போது, கர்த்தருடைய பிள்ளைகளின் இருதயமானது கர்த்தருக்கு உண்மையாகவும், அவரது வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற கிருபையான காரியங்கள் அனைத்திற்கும் உண்மையாகவும், நீதி, சத்தியம் மற்றும் அன்பின் ஆவிக்கு உண்மையாக இருந்தாலும் இவர்களது மாம்சமானது, உலகத்தில் கருத்துக்கள், அதன் ஏற்பாடுகள் மற்றும் சந்தோஷங்கள் முதலானவைகளில் ஒரு ஈர்ப்பு உடையதாகவே இருக்கிறது.

இந்த காரணத்தினாலேயே கிறிஸ்தவர்கள் மரித்தவர்களாக கருதப்படுகிறார்கள். பாவத்திற்கு மாத்திரமல்ல, அவனது சொந்த விருப்பங்கள், பசியார்வம், சாய்வுகள், தீவிரமான பசியார்வம் மற்றும் ருசியும் பாவத்திற்கு இணக்கமாகவும் இருக்கக்கூடிய உலகத்திற்கும் மரித்தவர்களாக கருதப்படுகிறார்கள். அப்போஸ்தலர் கூறுவது போல புது சிருஷ்டி, புது சித்தத்திற்கும் பழைய சிருஷ்டி, மாம்சீக இழிவான சித்தத்திற்கும் எப்பொதும் போராட்டம் உண்டு. அவர் கூறுகிறதாவது: "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது." (கலாத்தியர் 5:17) முன்னேறிய கிறிஸ்தவன் தனது மாம்சம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டது என்று கருதப்படும் நிலைமைக்கு சென்றடைந்தது என்றாலும், மாம்சமானது மறுபடியும் ஜீவனை அடையாதபடி தொடர்ந்து பரிசோதிக்க வேண்டும். இது அப்போஸ்தலரின் முறைமையாக இருந்தது. அவர் கூறுகிறதாவது: "மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை (மரித்த, அடக்கம் பண்ணப்பட்ட ) ஒடுக்கி (புதிய சிந்தைக்கு) கீழ்ப்படித்துகிறேன்." (1 கொரிந்தியர் 9:27) சரீரத்தை ஒடுக்குவது, மாம்சமானது மறுபடியும் ஜீவனை பெறாதபடி பார்த்துக் கொள்ளுவது, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு தொடர்ச்சியான தேவையாக இருக்கிறது. அது நம்மை பலப்படுத்தி, நமது மகிமையான கர்த்தர் மற்றும் இரட்சகரின் குணலட்சணமான பரிசுத்தமான குணலட்சணத்தை அடையச் செய்கிறது.

R4811

## A GOD READY TO PARDON
## வெகுவாய் மன்னிக்கிற தேவன்

ஓசியா 14

"ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மன உருக்கமும் உடைய தேவன்." (நெகேமியா9:17)

இன்றைய பாடம் தீர்க்கதரிசி ஓசியா இஸ்ரயேலுக்கு கொடுத்த அறிவுரையைப் பற்றியதாகும். அந்த சமயத்தில் இஸ்ரயேல் யூதாவிடமிருந்து பிரிந்து இருந்தது. ஆனால் அது நமது தேசத்திற்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் பொருந்தக் கூடியது. இஸ்ரயேல் தேசம் விக்கிரக ஆராதனை மூலம் கெடுக்கப்பட்டிருந்தது. புறஜாதி தேசங்களுடனான கலப்பு திருமணம் புறஜாதி மதங்களின் விக்கிரக ஆராதனையை புகுத்தியிருந்தது. சிற்றின்பங்கள் ஜனங்களின் ஈர்க்கும் அம்சங்களாக இருந்தன. சிற்றின்பத்துடன் நீதிநெறியின் குறைபாடும் வந்தது. அசுத்தங்களைப் பற்றிய உணர்வே இல்லாதிருந்தது. ஓசியாவின் மனைவியே ஒரு விபச்சாரி என்று பதிவு குறிப்பிடுகிறது. அவள் முடிவில் தனது கணவனையும் தவறான பிள்ளைகளையும் விட்டு பிரிந்தாள். பின்னர் தீர்க்கதரிசி அவளைத் தன் கூரையின் கீழ் சேர்த்துக் கொண்டார். ஆனால் மனைவியாக அல்ல. அவர் அவளிடமும் அவளது குழந்தைகளிடமும் பட்சமாயிருந்தார்.

தீர்க்கதரிசியின் சொந்த அனுபவம், அவரது சொந்த ஜனங்களின் மோசமான நிலையை உணரும்படி விழிக்கச் செய்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய ஆவி அவரிடத்தில் வந்த போது, தனது அனுபவத்தின் மூலம் அவர்களுடன் இரக்கம் காண்பித்தார். அவர் இரக்கமும் மனதுருக்கமும் உடையவராக இருந்தார். அவரது செய்தி இன்னும் அதிகப்படியான தெய்வீக இரக்கத்தையும் அனுதாபத்தையும் கூறியது.

"**கர்த்தரிடத்தில் திரும்பு**"

நம்முடைய பாடத்தில் தீர்க்கதரிசி, தனது தேசத்தின் விழுந்து போன நிலைமையையும் உதவியற்ற தன்மையையும் உணர்ந்து, தேவனுடைய கருணையை பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி தனது ஜனங்களை வலியுறுத்துகிறார். அவர்கள் உதவிக்காக அசீரியரை எதிர்பார்க்கக்கூடாது. எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளை நம்பக் கூடாது. அவர்களது சொந்த கை வேலையாகிய விக்கிரகங்களை இனி நம்பக்கூடாது. மாறாக, அவர்கள், திக்கற்றவனுக்கு இரக்கம் காண்பிக்கிற கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும். அவர்கள் சிருஷ்டிகராகிய பரலோக பிதாவை மறுதலித்ததால் அவர்கள் தந்தை இல்லாதவர்களாக இருந்தார்கள். சத்துருவின் பிள்ளைகளானார்கள். சிலரிடம் இயேசு கூறியதாவது: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்."

அவர்கள் மனந்திரும்புதலில், கர்த்தரிடத்தில் திரும்புதலில் அவர்கள் தப்பறையான நம்பிக்கைகள் மற்றும் அக்கிரமங்களை மாத்திரம் விட்டு விடாமல், கர்த்தரிடத்தில் வேண்டுதலும் செய்தார்கள். "தேவரீர், எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் கனிகளைச் செலுத்துவோம்."

பிறகு, இன்னும் நிறைவேறாத ஒரு தீர்க்கதரிசனம் வருகிறது. அது சீக்கிரம் நிறைவேறும், உணரப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். தேவன் தமது கோபத்தை விட்டு நீங்கி, இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதை குறித்து அது சொல்லுகிறது. மேசியாவின் ராஜ்யத்தின் ஆரம்பத்தில் அது நிறைவேறும்.

"**எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்**"

தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்டது போல, இந்த நாளின்

இஸ்ரயேல் ஜனங்கள் கர்த்தரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது கவனிக்கப்படத்தக்கது. தயவாய் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் கேட்கவில்லை. நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதின் மூலம் தெய்வீக தயவை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். விழுந்து போன மனுக்குலத்தில் அவர்களாலோ மற்றவர்களாலோ இந்த பிரமாணத்தை எழுத்தின் மூலமாகவோ ஆவியின் மூலமாக கடைபிடிக்க இயலாது. நாம் அனைவரும் விழுந்து போனவர்களாக, அபூரணர்களாக, தெய்வீக தேவைகளை சந்திக்க முடியாதவர்களாகவோ இருக்கிறோம் என்பது கற்றுக் கொள்ளப்பட வேண்டிய மாபெரும் பாடமாக இருக்கிறது. தெய்வீக கிருபை, இரக்கம், அக்கிரமத்திற்காக மன்னிப்பு, அபூரணத்திலிருந்து வெளியில் வர உதவி ஆகியவை நமக்கு தேவைப்படுகிறது என்பதும் அறிய வேண்டிய பாடம்.

ஓசியாவின் நாட்களில் அறிவிக்கப்படாததை தேவன் எப்படி நமக்கு நீதியாகவும் தெளிவாகவும் அறியப் பண்ணுகிறார். தேவனுடைய அன்பின் "நற்செய்தியின்" சாராம்சம் இப்போது தெளிவாக வைக்கப்பட்டிருக்கிறது. தெய்வீக நீதியின் சரிகட்டுதலுக்கான மீட்கும் பொருளின் பணியை கிறிஸ்துவின் மூலம் தேவனே கொடுத்திருக்கிறார். இந்த நிபந்தனைகள் இருந்தாலும் தேவன் நீதியாகவும் இரக்கமாகவும் இருக்கிறார்.

### "உணரத்தக்க ஞானமுள்ளவன்"

அதிகாரத்தின் கடைசி வசனம் அறிவிக்கிறதாவது: "இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள். பாதகரோவென்றால் அவைகளில் இடறி விழுவார்கள்."

தேவனுடைய இரக்கமுள்ள முன்னேற்பாடுகளை தெளிவாக புரிந்து கொள்ளுவதற்கு, மீறுதலுக்கு உள்ளானவர் முதலாவது, தனது சொந்த தேவையை உணர்ந்து, சிருஷ்டிகரின் அங்கீகாரத்திற்காகவும், அவரது இரக்கம் மற்றும் அன்பான முன்னேற்பாடுகளில் ஒரு பங்குக்காகவும் அவரிடம் மன்றாட வேண்டும். திராணிக்குத் தக்கதாக பாவத்தை விட்டுவிடுதல், தேவனில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த அவருடைய உதவி கிடைக்கும். அது ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் கொண்டு வரும். தெய்வீக இரக்கம் அறியாமல் செய்த கறைகளை நல்லதாக்கி, சகலமும் நன்மைக்கும் ஏதுவாக அவருக்கு நடக்க செய்கிறது என்று உணரச் செய்யும். தெய்வீக தயை, அன்பு, மன்னிப்பு மற்றும் சமாதானம் உடைய பரிசுத்த பெரும்பாதையான வழியில் மீறுபவர்களுக்கு இடமிருக்காது. ஏனெனில் அவர்கள் தேவனுடைய சித்தத்துக்கு மாறாக தெரிந்தே, வேண்டுமென்றே செல்வார்கள்.

### கிறிஸ்தவ மண்டலம் விக்கிரக ஆராதனையில் கெடும்

இந்த பாடத்தை இஸ்ரயேலருக்கு மாத்திரம் பொருத்தி இதன் முக்கியத்துவத்தை இழக்கக்கூடாது. கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக கூறிக்கொள்ளுகிற "கிறிஸ்தவ மண்டலம்" என்று அழைக்கப்படும் பெயரளவான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் இருக்கிறார்கள். வேத வாக்கியங்களில் கிறிஸ்தவ மண்டலம் வேசியாக கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது உலகத்தோடு உறவு வைத்துள்ளது. மேலும் அது வீடுகள், நிலங்கள், வங்கிகள், பங்குகள், பேரும் புகழும் போன்றவைகளை ஆராதிப்பதால் விக்கிரராதனைக்காரர்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறார்கள். உண்மையிலேயே கிறிஸ்தவ மண்டலத்திற்கு எதிரான தீவிரமான குற்றம் அதன் தேவனை இழந்ததாகும். சிலர் மட்டுமே, மிகவும் குறைவானவர்களே தேவனை தங்களது பிதாவாகவும், அவர் அவர்களை பிள்ளைகளாகவும் அறிந்திருக்கிறார்கள். "கிறிஸ்தவ மண்டலமானது" தங்களது சொந்த வேலையிலும், லாட்ஜ்கள், மன்றங்கள், டிரஸ்டுகள், காப்பீடுகள், சபை அங்கத்துவம் முதலானவைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். "தேவன் அவர்களது சிந்தனைகளில் இல்லை."

இந்த காலத்தில் "கிறிஸ்தவ மண்டலத்தின்" நிலைமை, படைகள், கப்பற்படை, வீரர்கள் மற்றும் துப்பாக்கிகள், விமானங்கள், வெடி குண்டுகள், மாபெரும் செல்வம் மற்றும் செழுமை ஆகும். லவோதிக்கேயா சபை சித்திரத்தின் கீழாக இன்றைய பேர் சபை, "நான் ஐசுவரியவான் என்றும் திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் சொல்லுகிறார்கள்." கர்த்தர் பதிலுரைப்பதாவது: "நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியவில்லை. நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே போடப்பட்ட பொன்னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்ளுவதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டும் என்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." (வெளிப்படுத்தல் 3:17,18)

### திக்கற்றவர்கள் இரக்கம் பெறுகிறார்கள்

அப்படிப்பட்டவர்கள் அக்கிரமத்தை சிநேகித்து நீதியை வெறுக்கிறர்கள், சத்துருவின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தயவின் மூலம் சர்வ வல்லவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க இயலாது. துன்மார்க்கன் சங்கரிக்கப்படுவான். ஆனால் இப்படிப்பட்டவர்கள் பாவத்தை கைவிட்டு, கர்த்தரிடத்தில் திரும்ப விரும்பினால், அவர்கள் திக்கற்றவர்களாக இருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு சாத்தானோ அல்லது தேவனோ அவர்களுக்கு பிதாவாக இல்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களிடத்தில் தேவன், கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தினால் இரக்கத்தையும் மன்னிப்பையும் கொடுக்க விரும்புகிறார். இப்படியாக பாவத்திலிருந்து திரும்புகிற அவர்கள் தெய்வீக தயவை பெறவும், தேவனுடைய பிள்ளைகளாக புத்திர சுவிகாரத்தைப் பெறவும் சரியான நிலைமையில் இருப்பார்கள். "வெகுவாய் மன்னிக்கிறவரும் இரக்கமும், மனஉருக்கமும் மகா கிருபையுமுள்ள தேவன்."

பாவத்திற்கு எதிரான தேவ கோபம் கடந்த ஆறாயிர வருடங்களாக பாவம், பேரழிவு மற்றும் மரணத்தின் ஆளுகையில் வெளிப்படுத்தப்பட்டிகிறது. மேசியாவின் ராஜ்யம் ஆரம்பிக்கும் போது இந்த சுவிசேஷ யுக முடிவில் மகா ஆபத்தின் நாள் அல்லது தெய்வீக கோபம் கிறிஸ்தவ மண்டலத்தின் மேல் வரும் என்று வேத வாக்கியங்கள் தெளிவாக முன்னறிவிக்கின்றன. பரிசுத்தவான்களாக ஆகி, தேவனுடைய பிரியமான குமாரனின் ராஜ்யத்தில் ஒரு பங்கைப் பெற தங்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறதற்கும் ஆபத்தின் தீவிரத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கும் இதுவே விசேஷித்த சந்தர்ப்ப காலமாக இருக்கிறது.

R4812

## HEZEKIAH'S GREAT REFORM

# எசேக்கியாவின் மாபெரும் சீர்திருத்தம்

2 நாளாகமம் 1:30

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." 1 சாமுவேல் 16:7

யூதாவின் ராஜா எசேக்கியா, தேவனுடைய மனுஷன், சீர்திருத்தவாதி, ஒரு தேசபக்தன் போன்ற ஆச்சரியமான பதிவுகளை பெற்றிருக்கிறான். ஆனால் அவன் ஒரு கெட்ட தகப்பனின் மகன். ஆனால் இவன் ஒரு நல்ல தகப்பனின் மகன். இவன் ஒரு கெட்ட தகப்பனின் மகன். நான்கு தலைமுறைகளில் நல்லவன், கெட்டவன் மாறி மாறி வந்தது, நமது இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பரம்பரையின் மூலம் வந்திருந்தாலும், அது இயற்கையின்படி சமநிலைப்படுத்துதல் நடைபெறுகிறது. நாம் அனைவரும் ஆதாமின் சந்ததியிலிருந்து வந்தவர்களாயிருந்து பொதுவான மானசீக, நீதிநெறி மற்றும் சரீர பிரகாரமான பலவீனங்களில் பங்கு பெற்றவர்களாக இருக்கிறோம். இது கடந்த 6000 வருடங்களாக நம்மேல் வந்து கொண்டு இருக்கிறது. பரிசுத்த பவுல் இது குறித்து கூறுகிறதாவது: "ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." (ரோமர் 5:12)

கீழான அல்லது பாவபோக்கு நம்முடன் பிறந்திருப்பதால், அதை யாரும் மேற்கொள்ள முடியாதபடி அது பலமடைந்திருக்கிறது. நாம் சுதந்தரித்துக் கொண்ட பலவீனங்களுக்கு எதிராக நமது சித்தங்களை அமைத்து, அவைகளுக்கு எதிராக தைரியத்துடன் போராடுவதுதான் நாம் செய்யக்கூடிய சிறந்த காரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு வெற்றியை நமது விழுந்துபோன சுபாவத்திற்கு எதிராக பெற்று பூரணத்திற்கு வரக்கூடும் என்றால் தேவன் இந்த வழியில் தேவன் நமக்கு இரட்சிப்பை அருளிச்செய்திருப்பார் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். இந்த வழி இயலாததாகையால், வேறு ஒரு வழியை நாம் அவரிடம் திரும்புவதற்கு நமக்கு தேவன் அளித்திருக்கிறார்; "அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராக" மரித்த கிறிஸ்துவின் மரணத்தின் புண்ணியத்தினாலும் மேசியாவின் உதவியினாலும் வேறு வழியை ஏற்படுத்தினார். தற்காலத்தில் அந்த உதவி அதை நாடுகிறவர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்கால வாழ்வில் சமாதான, சந்தோஷ ஆசீர்வாதங்களையும் பிறகு மேசியாவின் ராஜ்யத்தில் கனம், மகிமை மற்றும் சாகாமையை பெறுவார்கள்.

### அடுத்த யுகத்தில் கர்த்தருடைய சித்தத்தை செய்கிறவர்கள் மரிக்க மாட்டார்கள்

எனினும் அநேகர் மிகவும் பலவீனப்பட்டு, விழுதலின் மூலம் "இழப்பை" அடைந்து, உருவகமாக தங்கள் தேவைகளுக்கும், தேவனுடைய அன்பு, கிறிஸ்துவின் இரக்கம் மற்றும் இரட்சகர் அளிக்கும் உதவிக்கும் குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தற்காலத்தில் இரட்சகரின் உதவியை கொஞ்சம் கூட பெறமாட்டார்கள். எனினும் அவர்கள் தெய்வீக கிருபையிலிருந்து விடப்படுவதில்லை. பரிசுத்தவான்களின் தெரிந்துகொள்ளுதல் முடிவடையும் பொழுது மேசியாவின் ராஜ்யம் "வானத்தின் கீழெங்கும்" ஸ்தாபிக்கப்படும். அதன் சக்தியினால் பாவம் மேற்கொள்ளப்பட்டு, பாவத்தின் கைதிகளாகிய குருடர்களும், செவிடர்களும், மரணத்தின் சிறைவீடாகிய ஷியோல், ஹேடெஸுக்கு சென்றவர்களும் விடுவிக்கப்படுவார்கள்.

பிறகு பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் நித்திய ஜீவனும் சகலருக்கும் வாய்ப்பளிக்கப்படும். பிறகு, "பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின" என்கிற பழமொழி இனிமேல் இருக்காது. (எரேமியா 31:29,30) அதன்பிறகு பாவத்தின் திராட்சைக் காய்களை தின்பவனே இரண்டாம் மரணத்தில் மரிப்பான். விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் பூரணத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் உயர்த்தப்படுவார்கள்.

சித்தத்தின் சக்தி மற்றும் நன்மையை செய்யும் சித்தமாகிய, நேர்மறை அல்லது வல்லமையான சித்தத்தின் அவசியத்தைப் பற்றிய பாடத்தை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். எசேக்கியா ராஜா திடமான சித்தத்தை அல்லது இருதயத்தை பெற்றிருந்தான். அவனது வெற்றியின் இரகசியம், அவன் இரு மனமுள்ளவனாயிராமல், கர்த்தருடைய சித்தத்தை செய்யக்கூடிய, நன்மை செய்யும் முழு இருதயமுடையவனாய் இருந்ததேயாகும்.

ஒருவன் முழுவதும் தவறான சித்தமுடையவனாய் இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் நல்ல சித்தம் உடையவனாய் இருப்பது நல்லது என்பது உண்மை. அப்படிப்பட்டவன் வாழ்க்கையில் அதிகபட்சம் கொஞ்சம் வெற்றியையே அடைவான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுவோம். நமது சொற்பமான அனைத்தும் தேவனுக்கு நமது இரட்சகருக்கு, நீதியினிமித்தம் கொடுப்பதற்கு ஒன்றுமேயில்லை. நல்ல அர்த்தமுள்ள மக்களில் அநேகர் செய்யும் ஒரு தவறு என்னவென்றால் தங்கள் இருதயத்தின் கொஞ்ச பகுதியை தங்களுக்கென்று வைத்துக் கொள்வதுதான். நாம் தேவனுக்கென்று நமது இருதயத்தில் பத்தில் ஒன்பது பங்கை கொடுத்துவிட்டு, பத்தில் ஒரு பங்கை நமது சுயசித்தத்திற்கு என்று வைத்துக்கொண்டால், மிக அதிக இடைவெளியில் அது நமது குணலட்சணத்தை, நமது வாழ்க்கையை நமது தெய்வீக ஊழியத்தின் வெற்றியை பலவீனமடையவும் களங்கம் அடையவும் செய்யும். அர்ப்பணம் பண்ணாத பத்தில் ஒரு பங்கு சுயநலத்துக்கும் பாவத்திற்கும் வழியை ஏற்படுத்தி அர்ப்பணம் பண்ணப்பட்ட பத்தில் ஒன்பது பங்கிற்கும் பரவுவதை நாமே காண்போம். "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" என்கிற கர்த்தரின் அழைப்பின் கீழாக இப்படிப்பட்ட ஒரு அர்ப்பணத்தை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### எசேக்கியா, சீர்திருத்தவாதி

எசேக்கியா ராஜா, அரியணைக்கு ஏறின உடனேயே யேகோவா தேவனுடைய ஆராதனையை ஒழுங்குப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தான். அவனது தகப்பன் பாகாலுக்கு பலிபீடங்களையும் விக்கிரக தோப்புக்களையும் ஏற்படுத்தி விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தியிருந்தான். தேவனுடைய ஆலயம் பாழடைந்து கிடந்தது. ராஜாவின் கட்டளையின் கீழ் லேவியர்கள் ஆலயத்தை சுத்தப்படுத்த ஆரம்பித்தார்கள். பிரகாரம் முதலியவற்றிலிருந்து குப்பைகளை நீக்க எட்டு நாட்கள் தேவைப்பட்டது. அதன்பிறகு, ஆலயம் அல்லது பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்ல அதிகாரமுடைய ஆசாரியர்கள் ஆலயத்தை சுத்தம் பண்ண கட்டளையிடப்பட்டார்கள்.

ஆனால் முதல் வேலையாக பிரகாரம் மற்றும் ஆலயத்தை சுத்தப்படுத்துவதற்கு முன்னதாக ராஜா ஆசாரியரையும் லேவியரையும் தேவனுக்காகவும் அவரது ஊழியத்துக்காகவும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளச் சொன்னான். எவ்வளவு பொருத்தமானது! அந்த காலக்கட்டத்தில் வாழ்ந்தவரும் ராஜாவுக்கு ஆலோசகராகவும் இருந்த தீர்க்கதரிசி ஏசாயாவின், "கர்த்தருடைய வீட்டின் பாத்திரங்களை சுமக்கிறவர்களே உங்களை சுத்திகரியுங்கள்" என்ற வார்த்தைகளுக்கு இது எவ்வளவு இசைவாக இருக்கிறது! (ஏசாயா 52:11)

கர்த்தருடனான உறவில் பரிசுத்தமாக்கப்பட்ட இருதய நிலைமையில் ஒருவன் வரும் வரை தேவனுக்கு ஊழியம் செய்ய சரியானபடி தயாராக இருக்க மாட்டான் என்பது ஒரு முக்கியமான கருத்தாக இருக்கிறது.

தற்கால சீர்திருத்தத்திற்கு இந்த அம்சத்தை பிரயோகித்து, எல்லா மத சீர்திருத்தத்திலும் முக்கிய பங்குவகிக்கிற கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் செயல்பட வேண்டும் என்று நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஜனங்களிடம் உள்ள

செல்வாக்குக்குத்தக்கதாக நிறைவேற்றுவது நல்லதாக இருக்கும். ஆனால் இந்த காரியத்தைக் குறித்து பரிசுத்த பேதுரு கூறுகிற போதனைகளை நாம் மறவாதிருப்போமாக. இஸ்ரயேலரின் ஆசாரியத்துவத்தையும் கிறிஸ்தவ சபைகளின் நிறுவனங்களையும் ஒப்பிட்டு பரிசுத்த பேதுரு கூறுகிற கருத்தாவது: பழங்கால ஆசாரியர்களின் நிழலின் உண்மைப் பொருளை, தற்கால மதக்குருக்களில் காணவில்லை; ஆனால் தேவனுடைய பரிசுத்தவான்களில் அல்லது பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்களினால் பொது ஊழியத்தில் இருந்தாலும் இல்லாதிருந்தாலும் அதைக் காண்கிறார்கள். இப்படியாக கிறிஸ்துவின் அர்ப்பணம் செய்த சபையார் அனைவருக்கும் பரிசுத்த பேதுரு கூறுகிறதாவது: "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."

மாபெரும் ராஜா அவரது அர்ப்பணம் செய்த ஜனங்களுக்கு சபையாகிய தேவனுடைய ஆலயத்தை பரிசுத்தபடுத்தும்படி கட்டளையிடுகிறதாவது: "மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்துங்கள்." (2கொரிந்தியர் 7:1) இது செய்யப்படுகிற அளவுக்குத்தக்கதாக ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு செல்வாக்கு உண்மையான சபையாகிய தேவனுடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற அனைவரிடத்திலும் சென்று அடைகிறது.

### எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா

அந்த சமயத்தில் ராஜாவுக்கு அறுபத்தி ஐந்து வயது இருந்தாலும் அவர் பரந்த மனதும், தன்னை கர்த்தரிடம் முழு மனதுடன் அர்ப்பணம் செய்ததின் பலனாக ஏசாயா தீர்க்கத்தரிசி மூலமாக கர்த்தருடைய வழிநடத்துதலையும் உடையவராக இருந்தார். ஆலயத்தை பரிசுத்தப்படுத்தி பிறகு, ஜனங்களிடம் தேவனுடைய ஆராதனைக்கு திரும்பும்படியும், எருசலேமுக்கு வந்து பஸ்காவை ஆசரிக்கும்படியும் பொதுவான வேண்டுகோள் கொடுத்தான். இந்த செய்தி அவன் ஆளுகை செய்யும் யூதேயாவிற்கு மாத்திரமல்ல, பிரிந்திருக்கிற வடக்கேயுள்ள பத்து கோத்திரத்தார்களுக்கும் சென்றது. எசேக்கியா ராஜா ஆலயத்தை சுத்தப்படுத்தி பஸ்காவை ஆசரிக்க பிரமாண்டமான ஏற்பாடுகளை ஏற்பாடு செய்திருக்கிறார் என்றும் தேவனை சிநேகித்து அவரை ஆராதிக்க விரும்புகிற அனைவரும் பண்டிகையை ஆசாரிக்க வரும்படியும் ஆட்களை அனுப்பி ராஜா அறிவிப்பு கொடுத்தான்.

யூதா ராஜ்யம் முழுவதும் இந்த செய்தி நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வடக்கேயுள்ள ராஜ்யம், விக்கிரக ஆராதனை அங்கே நன்கு பலமாக இருந்ததால் செய்தியானது அநேகரால் ஏளனமும் கேலியும் பண்ணப்பட்டது. ராஜாவை நயவஞ்சகன் என்று கண்டித்தார்கள்.

எனினும் பஸ்கா பண்டிகை பெரும் வெற்றி என்று அறிவிக்கப்பட்டது. இரண்டாவது வாரம் கூட பண்டிகையை ஜனங்கள் சந்தோஷமாக அனுபவித்தார்கள். ராஜா தனது மந்தைகளிலும் அதிகமான காளைகளையும் ஆடுகளையும் கொடுத்தான். ஜனங்கள் ராஜாவின் தயாள குணத்தை பாராட்டி அதை பயன்படுத்திக் கொண்டார்கள்.

சந்தோஷம் ஜனங்களிடையே பொதுவாக இருந்தது. வடக்கேயுள்ள ராஜ்யத்திலிருந்தும் அநேகர் பங்கு பெற்றனர். நாம் வாசிக்கிறதாவது: "அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது. தாவீதின் குமாரனாகிய சாலமோன் என்னும் இஸ்ரயேலின் ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை."

தற்காலத்தில் முழு உலகமானது சந்தோஷத்தில் வளைந்திருக்கிறது. அது பல்வேறு வழிகளில், சட்ட பிரகாரமாகவும் சட்ட விரோதமாகவும் வேட்டையாடுதல், மீன் பிடித்தல், பணம் பண்ணுதல், தியேட்டருக்குச் செல்லுதல் போன்றவைகளை வீட்டிலும் குடும்பத்திலும் செய்ய நாடுகிறார்கள். ஆனால் அவர்கள் களிப்பையும் சந்தோஷத்தையும் நாடுகிறார்கள். ஆனால் வெகுச்சிலரே அதை காண்கிறார்கள். மெய்யான சந்தோஷத்தை கர்த்தரிடத்தில் சரியான இருதய நல்லிணக்கத்திற்கு வருவதின் மூலம் அவரிடம் மட்டுமே காணமுடியும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடனான ஐக்கியத்தின் மூலம் வருகிற சமாதானம் அல்லது சந்தோஷம் அல்லது அன்பைத் தவிர வேறு எதுவும் இவ்வளவு இன்பமானதாக, இவ்வளவு ஆத்தும சந்தோஷம் உடையதாக இருக்காது. இந்த சந்தோஷத்தை, ஆண்டவர் கூறியது போல, அவரால் மட்டுமே கொடுக்க முடியும். அதை யாரும் நம்மிடமிருந்து எடுக்க முடியாது. இந்த சந்தோஷத்தை பராமரிக்க அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டும். மெய்யான பொருளில் பஸ்காவை புசிக்க வேண்டும். தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபையினால், நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள், பாவத்திலிருந்து நீதிக்குள், உலகத்திலிருந்து "கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்" கடந்து வந்துவிட்டோம்.

### தெளிந்த புத்தியுள்ள ஆவி

வடக்கேயிருந்து வந்த பத்து கோத்திரத்தாரில் சிலர் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளின்படி தங்களை பரிசுத்தப்படுத்திக்கொள்ளாமல் பஸ்காவை புசித்தார்கள். எசேக்கியா ராஜா இது குறித்து ஒரு பெரிய காரியத்தைச் செய்தான். அவர்கள் தேவனுடைய பிரமாணங்களை புறக்கணித்து விக்கிரக ஆராதனைக்கு சென்றதற்காகவும், அவர்களது அறியாமை, அவர்களது மூடத்தனத்திற்கும் ராஜா வந்திருந்தவர்களை திட்டியிருக்கலாம். பரிசுத்த நகரத்திலிருந்து அவர்களை துரத்தும்படி அவன் கட்டளையிட்டிருக்கலாம். ஆனால் அவன் மிகவும் ஞானமாக செய்தான். அவர்களது தவற்றிற்காக அவன் தேவனிடம் அவரது மன்னிப்புக்காக மன்றாடினான். அதே போல கிறிஸ்துவின் சபைகளிலும், கர்த்தரின் "செழுமையான பதார்த்தங்களின் விருந்தில்," வாழ்க்கையில் தேவையான பரிசுத்தம் இல்லாமல் முறையில்லாமல் சிலர் பங்கெடுக்கலாம். இப்படிப்பட்ட காரியங்களில் நாம் ஞானமாக நடந்து கொள்ளுவோமாக. அவர்களை மாயக்காரர் என்று கண்டனம் செய்யாமலும் அவர்களது குறைவுகளில் பயமுறுத்த நினைக்காமலும் இருப்போமாக. அவர்களுக்காக ஜெபித்து மிகச்சிறந்த முறையில் அவர்களுக்கு உதவுவோமாக. நமது வசனத்தின் வார்த்தைகளை நினைவுகூருவோமாக. "மனிதனோ முகத்தைப் பார்க்கிறான். தேவனோ இருதயத்தை பார்க்கிறார்." ஆகையால் முறைமைகள் மற்றும் சடங்காச்சாரங்களில் நாம் மிகவும் கடுமையாக இல்லாமலும் கர்த்தரிடம் நெருங்க நாடுகிற அனைவரிடத்திலும் நாம் அன்புடனான இரக்கத்தை காண்பிப்போமாக.

### தெய்வீக ஆசீர்வாதம்

பஸ்கா விருந்தின் முடிவு ஜனங்களின் மேல் ஆசாரியர் மற்றும் லேவியரின் மூலமாக தெய்வீக ஆசீர்வாதமாக இருந்தது. அதே போல ஒரு தெய்வீக ஆசீர்வாதம், கர்த்தரின் பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்களாகிய, அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாச வீட்டார் அனைவரிடமிருந்து பொதுவான ஜனங்களுக்கும், அவர்களது அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் தொலைவிலிருந்து வந்த அவர்களது பார்வையாளர்களுக்கும் செல்கிறது. அப்படிப்பட்டவை மனிதர்களிடையே நமது செல்வாக்காக இருக்கிறது. இதைப் பொறுத்தவரை நாவின் வல்லமை குறித்து அப்போஸ்தலர் கூறியதை நினைவுகூருவோமாக. "அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம். மனுஷனை அதினாலே சபிக்கிறோம்." நமது நாவும் நமது சகல சக்தியும் ஜனங்களை ஆசீர்வதிக்கவும் நமது தேவனை துதிக்கவும் பயன்படுத்தப்படுவதாக.

ராஜா, ஆலயத்தின் சீர்திருத்தத்தை ஞானமாக ஆரம்பித்து அதின் முதல் பங்கை ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்தான். பிறகு ஜனங்கள் எழும்பி எருசலேமில் உண்டான பலிபீடங்களையும் தூப பீடங்களையும் அகற்றி கீதரோன் ஆற்றிலே போட்டார்கள். இது பஸ்காவிற்கு பிறகு நடந்தது. ஜனங்களுடையே வைராக்கியம் உயர்ந்து, அவர்களது தேசங்களுக்கு சென்று விக்கிரகங்களையும் பாகாலின் மேடைகளையும் பீடங்களையும் இடித்து அவைகளை எல்லாம் தகர்த்துப் போட்டார்கள்.

இந்நாட்களிலும் கூட இப்படித்தான் இருக்கிறது. எல்லா இடங்களிலும் நமது காலத்தின் வெளிச்சம் அதிகமதிகமான அற்பத்தனம், சுயநலம், ஊழல் போன்றவை நூற்றாண்டு காலங்களாக இருந்து வந்தவை இன்னும் பெருகியிருப்பதை காண்பிக்கின்றன. சீர்திருத்தத்திற்கான அழைப்பு எல்லா இடங்களிலும் கேட்கப்படுகிறது. ஆனால் சில சமயங்களில் பலவீனமாக இருக்கின்றன. சீர்திருத்தத்திற்கான சரியான இடம், எசேக்கியாவின் நாட்களைப் போல, ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களின் பரிசுத்தப்படுத்துவதாகும்.

இதை நாம் மறந்து விடக்கூடாது. தேவனுக்கு இணக்கமாக நமது இருதயத்தை சுத்தப்படுத்தின பிறகு, ஆலயத்தை பரிசுத்தப்படுத்த முன்செல்வோம். விக்கிரகங்களும் மனிதர்களின் பாரம்பரியமும் கடந்த கால விசுவாச கோட்பாடுகளும் தேவனுடைய ஆலயத்தை அசுசிப்படுத்துகின்றன. இவைகள் நீக்கப்பட வேண்டும். மானிட கோட்பாடுகள் புறஜாதி தத்துவங்கள் போன்ற அசுத்தங்கள் தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும். புத்தகத்தையும் சிலுவையையும் இனி வணங்காமல் (ஆராதிக்காமல்) புத்தகத்தின் போதனைகளுக்கும் சிலுவையின் முக்கியத்துவத்துக்கும் மதிப்புதர வேண்டும்.

ராஜாவின் வழிநடத்துதலின் கீழ், கிறிஸ்துவின் சபையானது தனது பொறுப்பை உண்மையுடன் நடப்பித்தால் அது ஒரு மத மறுமலர்ச்சியாக இருக்கும். அது ஜனங்களின் சுத்திகரிக்கப்படுதலாக இருக்கும். அது பொருளாசையாக விக்கிரக ஆராதனை, சுயநலம், இழிவான ஆதாயம், உலக புகழ் ஆகியவற்றை நீக்கிவிட்டு, நன்மைகளையும், பூரண ஈவுகளையும் கொடுக்கக் கூடியவரை வணங்குதலை அர்த்தப்படுத்தும்.

**R4817**

## STRENGTH AND PEACE

# பெலனும் சமாதானமும்

“ கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.” சங்கீதம் 29:11

உண்மையான சுவிசேஷத்தின் “கம்பீர சத்தத்தை அறிந்து,” கர்த்தரிடம் நம்மை முற்றிலுமாக அர்ப்பணம் செய்ததிலிருந்து கடந்த சென்ற வருடங்களை பின்னோக்கி நாம் பார்க்கும் போது, நமது சிறந்த முயற்சி இருந்தும் அபூரணங்களை வருத்தத்துடன பார்க்கிறோம். நாம் முன்னோக்கி பார்க்கும் பொழுது, நமது ஓட்டத்தை தடுக்கக்கூடிய தடைகளை நாம் காண்கிறோம். குறைந்து வருகிற நமது தைரியத்தை நாம் வலுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் தெய்வீக கிருபைக்கான விசேஷித்த வாக்குத்தத்தின் மூலம் வலுப்படுத்த வேண்டும். “கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்” என்கிற ஆசீர்வாதமான உறுதிமொழியை நாம் பெற்றிருக்கிறோம். “ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.” (சங்கீதம் 50:15)

நமது மகா அதிபதியின் கீழ் நிச்சயமற்ற போராட்டத்திற்காகவும் தைரியமற்ற தன்மை அல்லது உண்மையற்ற தன்மைக்காகவும் நாம் போர் வீரர்களாக சேவகம் எழுதிக்கொள்ளவில்லை. தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கமும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டு தரிப்பித்துக் கொண்டால் மட்டுமே சத்துருவானவனின் அக்கினியாஸ்திரங்களிலிருந்து நாம் முழுவதுமாக பாதுகாக்கப்படுவோம். நாம் நமது அதிபதியை நெருக்கமாக பின்பற்றுகிறவரை, நமது அதிபதியின் நிலையான பிரசன்னத்தை பெற்றிருப்போம். போரின் கூச்சலுக்கு மேலாக நாம் அவரது உற்சாகமூட்டும் சப்தத்தை கேட்போம். “பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.” “திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்.” (லூக்கா 12:32; யோவான் 16:33) நாம் பலவீனமாகவும் தைரியமில்லாதவர்களாகவும் இருந்தால் ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்தை மட்டுமே நினைவுகூர வேண்டும். “கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்.” நம்மை காணக்கூடிய மற்றும் காணக்கூடாத நமது எல்லா சத்துருக்களிடமிருந்தும் நம்மை விடுவிக்கிற தேவனை நமது விசுவாசத்தினால் மகிமைப்படுத்துவோம்.

மற்றவர்களைப் போல, கர்த்தருடைய ஜனங்களுக்கும் வலிமையும் பொறுமையும் தேவைப்படுகிறது. இல்லையென்றால், உலகம், மாமிசம் மற்றும் சத்துருவானவனுடைய போராட்டத்தில் அவர்கள் சீக்கிரத்தில் உற்சாகம் குறைந்துபோவார்கள். அவர்களுக்கு பலமும் உற்சாகமும் தேவைப்படுகிறது. நாம் கவனித்துக் கொண்டிருக்கிற வசனத்தில் பெலன் என்கிற வார்த்தை தைரியத்தைக் குறிக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு தைரியத்தைக் கொடுப்பார். பல்வேறு விதங்களில் நம்மை உற்சாகப்படுத்துகிறார். நாம் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டுவது போல நம்மை ஒருவரையொருவர் மூலம் உற்சாகப்படுத்துகிறார்.

### குழந்தைகளுக்கு பாலாகாரம் – பூரண வயதுள்ளவர்களுக்கு பலமுள்ள ஆகாரம்

எனினும் நாம் தனிப்பட்டவரிடம் உள்ளார்ந்த பலத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் கவனிக்கிறோம். “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை திடப்படுத்துவார்.” (சங்கீதம் 31:24) கர்த்தரின் ஆவியினால் “உள்ளான மனுஷன்” பலப்படுத்தப்படுகிறான் என்று நாம் உறுதிப்பண்ணப்படுகிறோம். “உள்ளான மனுஷனுக்குரிய” இப்படிப்பட்ட குறிப்பிட்ட பலத்தை யாரும் பெறவில்லை. “பழையவைகள் ஒழிந்து போய், எல்லாம் புதிதாக்கப்பட்ட” புது சிருஷ்டி மட்டுமே அதை பெற முடியும். (2கொரிந்தியர் 5:17) பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட இந்த குறிப்பிட்ட வகுப்பாரிடம் மட்டுமே கர்த்தருடைய செயல்பாடு குணலட்சண அபிவிருத்திக்காக இருக்கிறது.

“நீங்கள் வளரும்படி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருந்து” பலப்படுங்கள். (1பேதுரு 2:2) புதிய சுபாவம் வளரவும் அதன் மூலம் பலமான ஆகாரத்தை ஜீரணிக்கக்கூடியவர்களாகவும் இப்படியாக நமது கர்த்தரின் குணலட்சண சாயலில் அபிவிருத்தி அடையவும் திருவசனமாகிய ஞானப்பாலை கர்த்தர் தமது குழந்தைகளுக்கு கொடுக்கிறார். இப்படியாக இவர் குழந்தைகளுக்கு பாலையும் பூரண வயதுள்ளர்களுக்கு பலமுள்ள ஆகாரத்தையும் வழங்கி வருகிறார். (எபிரேயர் 5:12,14) கர்த்தரிலும் அவரது சத்துவத்திலும் பலம் பெறுகிறவர்கள் தெய்வீக கிருபையை பயன்படுத்திக்கொள்ளுவார்கள்.

எனினும் நமது விசுவாசமே நமது பெலத்திற்கும் சமாதானத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது. வாழ்க்கைப் புயல் எவ்வளவு தீவிரமாக தாக்கினாலும் நமது நங்கூரத்தை விட்டுவிடவும் நழுவவிடவும் கூடாது. “தேவனுடைய அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது” என்பதையும் “அவரது சத்தியம் நமக்கு கேடகமும் பாதுகாப்புமாயிருக்கிறது” என்பதையும் நமது மாம்சீக பலவீனங்களும் அபூரணங்களும் இருந்தாலும், “அவர் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்” என்பதையும் நாம் எப்பொழுதும் நினைவுகூர வேண்டும். இவைகளை மூட, நமது பரிகாரியாகிய கிறிஸ்துவின் நீதியின்

சட்டதை பெற்றிருக்கிறோம் என்பதையும், “பிதா தாமே நம்மை சிநேகிக்கிறார்” என்பதையும் “நம்முடைய உருவம் இன்னதென்றும் அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்” என்பதையும், அவர் தமது பிள்ளைகளிடத்தில் அன்பும் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். (2தீமோத்தேயு 2:19; சங்கீதம் 91:4; ரோமர் 4:21; யோவான் 16:27; சங்கீதம் 103: 14) இடுக்கமான பாதையில் சோதனைகளுக்கும் சச்சரவுகளுக்கும் இடையே நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் நமது இருதயங்களைப் பலப்படுத்தி பொறுமையுடன் சகிக்கவும் அவர் சொல்லியிருப்பதைக் காட்டிலும் வேறு என்னத்தை அவர் நமக்கு சொல்லக்கூடும்.

மிகுந்த மனதுருக்கத்துடனும் மென்மையுடனும் பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி இரவில் நமது கர்த்தர் தமது பிரியமான சீஷர்களிடம் ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் அருளினார். இதுவே அவர் அவர்களுக்கு கொடுத்த பரம்பரை சொத்தாகவும் விலை மதிப்பற்றதாகவும் இருந்தது. அதுவே அவர் வாக்குத்தத்தம் செய்த ஆத்தும சமாதானம். அவர் பெற்றிருந்த தேவ சமாதானமாகிய மன அமைதியும் மன சமாதானமும் ஆகும். இதே சமாதானத்தையே நமது பிதாவானவரும் எப்பொழுதும் அனுபவித்து வந்தார்; தீமையை அனுமதித்த போது வந்த அமைதியின்மையிலும் அவர் அனுபவித்தது ஆகும். ஆனால் அதே மூலத்திலிருந்து பெறப்படவில்லை. இந்த சமாதானம் யேகோவா தேவனில் மையப்பட்டிருக்கிறது. ஏனெனில் அவர் சர்வ வல்லமையையும் எல்லையற்ற ஞானத்தையும் பெற்றிருந்தார். கிறிஸ்துவின் சமாதானம் அவரில் அல்ல, அவரது ஞானம், வல்லமை மற்றும் கிருபையில் உள்ள விசுவாசத்தின் மூலம் தேவனில் மையப்பட்டிருந்தது. அதே போல, கிறிஸ்து தமது சமாதானமாக (“என்னுடைய சமாதானம்”) தேவனுடைய சமாதானத்தை பெற்றிருந்தால் அது அவருடையதைப் போல விசுவாசத்தினால் தேவனில் மையப்பட்டிருக்க வேண்டும்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சமாதானம், சில காலம் மட்டுமே அனுபவிக்கக்கூடிய உலகத்தின் சமாதானத்தை போன்றதல்ல. ஆனால் “என்னுடைய சமாதானம்” என்பது கிறிஸ்துவே விசுவாசத்தினால் அனுபவித்த தேவனுடைய சமாதானம். “கிறிஸ்து ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நம் நிமித்தம் தரித்திரரானார்.” (2கொரிந்தியர் 8:9) அவர் தமது சீஷர்களை ஒவ்வொருவராக இழந்து கொண்டே வந்து கடைசி மணி நேரத்தில் அனைவரையும் இழந்தார். இந்த இழப்பிலும், துன்பத்திலும், அவதூறிலும், இகழ்ச்சியிலும் சிலுவையின் கடுந்துயரிலும் சமாதானத்தை அனுபவித்தார். இந்த சமாதானத்தை வாழ்க்கை சூழல் அழிக்கவோ எந்த சத்துருவும் நம்மிடமிருந்து எடுத்துப்போடவோ முடியாது.

### “உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்”

“துன்மார்க்கருக்கு சமாதானமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.” (ஏசாயா 48:22) “துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப் போல் இருக்கிறார்கள். அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது.” அவர்களுடைய இருதயம் சமாதானத்துக்கும் நீதிக்கும் இசைந்திராமல், சுயநலத்தினால் நிறைந்திருக்கிறது. துன்மார்க்கன் சுய தேடுதலையும் பேராசை உடையவர்களாகவும், தாங்கள் விரும்பியது கிடைக்கவில்லையென்றால் கோபப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். தங்களுக்கு கிடைக்காததை வேறு யாராவது அனுபவித்தால் பொறாமை கொள்ளுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவை அனைத்தும் சமாதானக் குறைவை குறிப்பிடுகிறது. கர்த்தருடைய ஜனங்களில் யாராவது இந்த தீய குணங்களை பெற்றிருந்தால், “எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை” அவர்களால் பெற இயலாது, அது விசுவாசத்தினால் கிடைக்கும் இருதய இளைப்பாறுதல். இந்த சமாதானத்தில் மனதின் எல்லா குணங்களின் திருப்தியும் இருக்கிறது. சத்திய அறிவையும் ஆசீர்வாதமான இரட்சிப்பின் சந்தர்ப்பத்தையும் மற்றவர்களுக்கு அறிவிக்கிற கர்த்தரை மகிழ்விக்கிற நோக்கத்தை மனது அபிவிருத்தி செய்கிறது. அது தீமைக்குப் பதிலாக நன்மை செய்யும் நமது இலட்சியமாக ஆகிறது. ஆகையால் இலட்சியமானது சரியான திசையில் திரும்பி, யாரும் எடுத்துப்போட முடியாத தெய்வீக சமாதானம் மனம் மற்றும் இருதயத்துக்கு வருகிறது.

எனினும் அது கர்த்தருடைய ஜனங்களுக்கு, தனித்தனியாகவும் கூட்டாகவும் வெளிப்படையான சமாதானமாக இராமல், மிகவும் துன்பம் தரும் அனுபவங்களாக இருக்கும். இயேசு முன் எச்சரித்தது போல சபையானது எப்பொழுதும் துன்பப்படுத்தப்படுகிறது. “என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்.” “நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதை சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களை பகைக்கிறது.” (1யோவான் 3:13; யோவான் 15:19)

### “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு”

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சமாதானம், உலகத்தினால் உணர்ந்து கொள்ளக்கூடியதாக, அங்கீகரிக்கக்கூடியதாக இருக்காது. ஏனெனில் அதைப் பெற்றிருப்பவர், கர்த்தர், அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளைப் போல புயல் பாதையை பெற்றிருப்பார். அவர்கள் வெளியரங்கமாக சமாதானத்தை பெற்றிருக்கவில்லை. எல்லா வகையிலும் துன்பமே சூழ்ந்திருந்தது. அவர்கள் துன்புறுத்தப்பட்டு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு துரத்தப்பட்டார்கள். பழங்கால பரிசுத்தவான்களில் சிலர் கல்லெறியுண்டார்கள். சிலர் வாளால் அறுப்புண்டார்கள். எனினும் தேவ சமாதானம் அவர்களது உள்ளத்தில் ஏராளமாக இருந்தது. அது இந்த துன்பங்கள் அனைத்தையும் சந்தோஷமாக சகித்துக் கொள்ளச்செய்தது. தேவன் தீமையை அனுமதிப்பதற்கான நோக்கம் நிறைவேறும் வரைக்கும் விசுவாசிகள் அனைவருக்கும் இப்படியாகவே இருக்கும். நாம் முன்னெச்சரிக்கைப் பண்ணப்படுகிறோம். ஆனால் வாழ்க்கையின் எல்லா புயல்களிலும் இந்த சமாதானம் நிலைத்திருக்கும் என்று உறுதியளிக்கப்படுகிறோம். “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.” ஆனால் “என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்.” (யோவான் 16:33)

தேவன் தம்முடைய பிள்ளைகளுககு சமாதானத்தை அருளுவார் என்கிற இந்த வாக்குத்தத்தம் இருதய சமாதானத்திற்கு மட்டுமே பொருந்துவதாக தெரிகிறது. நமது கர்த்தரும் அப்போஸ்தலர்களும் அவர்களது சத்துருக்கள் அவர்களுக்கு செய்ததைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு அதை பெற்றிருந்தார்கள். பவுலும் சீலாவும் சிறையில் இருந்த போது, அரசாங்கத்தை திட்டாமலும் அவர்களுக்கு என்ன செய்யப்படும் என்று அச்சுறுத்தாமலும் தங்களது தலைகளை கம்பிகளில் இடித்துக் கொள்ளாமலும் அவர்கள் “தேவன் நம்மைக் குறித்து கவலைப்படவில்லை; நாம் இனி நமது சொந்த வேலையை பார்ப்போம்” என்று கூறாமலும், தேவனை புகழ்ந்து பாடினார்கள். இதே போல் தான் நமக்கும் இருக்கும். காரியங்களை நாம் தெய்வீக கண்ணோட்டத்தில் பார்த்து, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தை உணர்ந்து கொண்டு அது நமது இருதயத்தை ஊக்கமளிக்கிற அளவுக்குத் தக்கதாக இந்த வாக்குத்தத்தங்களில் களிகூருவோம். நமது இருதயம் ஆசீர்வதிக்கப்படும். நம்மால் மேற்கொள்ள முடியாத அளவுக்கு சோதனைகளும் துன்பங்களும் நமக்கு வந்தாலும், இவைகள் நமக்கு கனிகள் மற்றும் ஆவியின் கிருபைகளுக்கு ஏதுவாக நடப்பதால், நாம் களிகூர்ந்து தேவனுடைய அன்பிற்காக நாம் ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

### “என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்”

தேவனுடைய சமாதானம், மகா கிளர்ச்சி, வருத்தம் மற்றும் பல்வேறு வலிகள் ஆகியவற்றுடன் இணக்கமானதாக

இருக்கிறது. ஏனெனில் அது வெளிப்படையான சூழ்நிலைகளுக்கு சார்ந்திருக்கவில்லை. ஆனால் பூரண இருதய நிலைமை மற்றும் சரியான சமநிலையான மனதையும் சார்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட தேவ சமாதானம், நமது கர்த்தரால் தமது பூமிக்குரிய வாழ்க்கையின் அனைத்து கொந்தளிப்பு மற்றும் குழப்பத்தின் இடையே அனுபவிக்கப்பட்டது. அது நமது கர்த்தர் இந்த உலகத்தை விட்டு பிரியப்போகும் பொழுது தமது சீஷர்களுக்கு கொடுத்த கடைசி சொத்தாக இருக்கிறது என்பதை நாம் கவனிக்கிறோம். அவரது வார்த்தைகளாவது: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் (கொஞ்சமாகவோ அல்லது அழிந்து போகிறதாகவோ) நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." (யோவான் 14:27)

நமது தலைப்பு வசனத்தில் வாக்குத்தத்தம் – "கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்" என்பது இந்த யுகத்திற்கு உரியது. சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. (ரோமர் 8:22) ஆயிரம் வருட யுகம் வரும் போது சமாதானம் நிலவி இப்படியாக அவர் அனைத்து ஜனங்களுக்கும் சமாதானத்தை அருளுவார்.

பிறகு, நாம் கவனிக்க வேண்டியது, தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் "விசுவாசம்" என்ற வார்த்தையாகும். நாம் ஒவ்வொருவரும் நமது இருதயத்தில் "கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்" என்கிற வாக்குத்தத்தத்தை எழுதுவோமாக. நாம் "அவரது ஜனங்களாக" இருப்போமாக. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பெலத்தை நாம் மிகவும் ஆவலுடன் விரும்பி, அதை உண்மையுடன் பயன்படுத்துவோமாக. "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்." "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக் –கிறாரே." (1 தெசலோனிக்கேயர் 5:24; எபிரேயர் 10:23)

ஆகையால் நீங்கள் பலத்திலோ அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சமாதானத்திலோ குறைவுபட்டால், தவறு உங்களுடையது, தேவனுடையது அல்ல. உங்களது இருதயத்துக்கு தேவையான அவரது கவனிப்பில் நீங்கள் விருப்பம் கொள்ளவில்லை அல்லது அவர் அளித்த பலத்தை நீங்கள் பயன்படுத்தவில்லை. "கர்த்தர் தமது ஜனத்திற்கு (அவரை நம்புகிறவர்களுக்கு, உண்மையுள்ள ஊழியர்களுக்கு, தங்கள் ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்த திறமைகளை, குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும், போற்றுவதற்கு பயன்படுத்துகிறவர்கள்) பெலன் கொடுப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்."

R4818

## THE RANSOM AND ITS APPLICATION TO ALL MANKIND

## மீட்கும் பொருளும் அனைத்து மனுக்குலத்திற்கும், அதன் பிரயோகமும்

"மீட்கும் பொருள்" என்பது மனுக்குலத்தின் விலைக்கிரயத்துக்கும், அந்த விலைக்கிரயத்தைக் கொண்டு மனுக்குலத்தை மீட்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தையின் இரண்டு பயன்பாட்டைக் குறித்து விளக்கத்திற்கு இரண்டு வேத வாக்கியங்களை நாங்கள் கொடுக்கிறோம். (1) "எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." (1 தீமோத்தேயு 2:6) (2) "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்." (ஓசியா 13:14) இந்த இரண்டு வசனங்களில் மீட்கும் பொருள் என்பதின் இரண்டு பயன்பாட்டை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் மீட்கும் பொருள் என்ற வார்த்தை "மீட்டுக்கொள்" என்ற அர்த்தத்திலும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. உண்மையிலேயே இரண்டு வார்த்தைகளும் விலை கொடுத்து வாங்கும் கருத்தோடு இணைந்திருக்கிறது. மீட்டுக்கொள்ளுதல் என்பது திரும்பி வாங்குதல் ஆகும். மீட்கும் பொருள் என்பது 1தீமோத்தேயு 2:6இல் பயன்படுத்தப்பட்டது போல சரியான விலை கொடுத்து வாங்குதல் ஆகும்.

வேதாகமம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தை விலை கொடுத்தல் என்ற பொருளில் சில சமயங்களில் பேசுகிறது. நமது கர்த்தராகிய இயேசு தம்மைத் தாமே மீட்கும் பொருளாக கொடுத்தார் என்று வேத வாக்கியம் கூறுகிறது. (மத்தேயு 20:28; மாற்கு 10:45) அவர் யோர்தானில் தம்மை ஒப்புக் கொடுத்தார்; தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததை கல்வாரியில் நிறைவேற்றினார். ஆதாமையும் அவரது அனைத்து இனத்தாரையும் மரண தண்டனையிலிருந்து மீட்பதற்கு தேவையான விலைக்கிரயத்தை, மீட்கும் விலையை தமது மரணத்தில் செலுத்தினார்.

மீட்கும் பொருளைக் கொடுப்பதற்கும், மீட்கும் பொருளை பிரயோகிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. விலைக்கிரயம் நமது கர்த்தராகிய இயேசுவில் இருக்கிறது. ஆனால் அதை மற்றவர்களுக்கு கொடுப்பதற்கு முன்பு அதை அவர் பலியாக கொடுக்க வேண்டும். அவர் அந்த விலைக்கிரயத்தை கொடுத்த பிறகு, தேவன் அவரை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள், பரலோகத்திற்கு நுழைவதற்கு அனுமதித்து, அந்த விலைக் கிரயத்தை பயன்படுத்தும்படி அதிகாரம் கொடுத்தார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. வேத வாக்கியங்கள் குறிப்பிடுவது போல அவர் அந்த விலைக்கிரயத்தை இரண்டு விதமாக தேவனுக்கு பலியாக செலுத்துகிறார்.

முதலாவது : அவர் கொடுத்த ஜீவனை, மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தின் புண்ணியத்தை அவரது சரீரத்தை அமைக்கிற சபைக்கு ஒதுக்கினார். சுத்திகரிக்கப்படுவதற்கு அவரிடம் பாவமில்லை. ஆனால் தேவனுடைய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகிறவர்களுக்கு பாவங்கள் உண்டு. அவர்களுக்கு தம்முடைய இரத்தத்தை, மீட்பின் விலையாக அல்லது புண்ணியமாக அவர்களை பாதுகாக்க, மரணத் தண்டனையிலிருந்து விடுவிக்க மட்டுமல்ல, மீட்பின் வேலையில் அவருடன் பங்குதாரராக ஆவதற்கும் உபயோகித்திருக்கிறார். அந்த பலியின் புண்ணியத்தை ஆதாமுக்கோ அவரது பிள்ளைகளுக்கோ உபயோகிக்கவில்லை. ஆனால் நிழலில் உதவி ஆசாரியர்களாக, லேவியர்களாக ஆசாரிய குடும்பத்தின் சகோதரர்கள் மற்றும் ஊழியர்களாக குறிப்பிடப்பட்டவர்களுக்கு மட்டுமே உபயோகிக்கிறார்.

இரண்டாவதாக : கிறிஸ்து தமது பலியை சகல ஜனங்களின் சார்பாக பயன்படுத்துவார். நிழலில் காண்பிக்கப்பட்டபடி, பாவ நிவாரண நாளின் இறுதியில் கிருபாசனத்தின் மேல் இரத்தம் தெளிக்கப்பட்டது. இரண்டாவதாக ஜனங்களின் மேல் தெளிக்கப்பட்டது. இந்த செயலின் உண்மைப் பொருள் ஆதாமின் தண்டனைக்காக முழுமையாக ஈடு செய்யப்படுகிறதை காண்பிக்கிறது. சகல ஜனங்களும் மேசியாவின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வரும் போது, அவர்கள் பூரணத்திற்கு திருப்பப்படாமல் மரண நிலைமையிலேயே காணப்படுவார்கள். அபூரணத்தினால் தேவ கோபம் இன்னும் அவர்கள் மேல் இருக்கிறது என்று இன்னொரு வேத வாக்கியம் நமக்கு கூறுகிறது. புது உடன்படிக்கைக்கு கீழாக, பொறுப்பான மத்தியஸ்தராக ஆக்கப்பட்ட மேசியா, மரண தீர்ப்பினால் பலவீனங்களுக்கு கீழாக இருக்கும் "சகல ஜனங்களுக்கும்" பொறுப்பெடுத்துக் கொள்ளுவார். இந்த புது உடன்படிக்கைக்கு கீழாக மேசியாவின் ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிற அநேகர் ஜீவனை அளிக்கிறவருடன் உறவுக்குள் வருவார்கள். அது "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்கிற வசனத்துக்கு இசைவாக இருக்கும். (1 யோவான் 5:12;

யோவான் 3:36) இயேசுவை தற்காலத்தில் அவரது சகோதரனாகவோ அடுத்த யுகத்தில் அவரது பிள்ளையாகவோ ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பெறுவார்கள்.

நாம் மறுபடியும் மீட்கும் பொருள் மற்றும் மீட்கப்பட்டது என்ற வார்த்தைகளுக்கு வருவோம். நமது கர்த்தரைப் பொறுத்தவரை இந்த வார்த்தைகள் அவர் மரித்த போது அவர் நிறைவேற்றின மீட்கும் வேலையை குறிக்காமல், அவர் மீட்கும் விலைக்கிரயத்தை கொடுத்ததை குறிக்கிறது. மத்தியஸ்த ஆளுகையில் கிறிஸ்துவின் முழு வேலையும், அவர் யாருக்கு மீட்கும் விலைக்கிரயத்தைக் கொடுத்தாரோ அவர்களை விடுவிப்பதாகும். இந்த வார்த்தையின் கடைசி பயனாக சபையானது கிறிஸ்துவுடன் உலகத்தை விடுவிக்கும் இந்த மீட்கும் வேலையில் பங்கு பெறும் என்று சொல்லுவது சரியாக இருக்கும். இந்த கருத்துதான் வேத வாக்கியங்களில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மீட்கும் விலைக்கிரயத்தில் சபையானது பங்கு பெறுகிறது என்று கூறுவது தவறாக இருக்கும். மீட்கும் விலைக்கிரயம் பரிபூரண மனிதராகிய இயேசு ஆகும். அவர் எல்லாருக்குமான மீட்கும் பொருளைக் கொடுத்தார். அந்த பலியில் ஆதாமின் சந்ததியினர் அனைவருக்கும் போதுமான புண்ணியம் இருக்கிறது. சபையானது மீட்கும் வேலையில் அல்லது மீட்கும் பொருள் உபயோகப்படுத்தப்படுபவர்களை மீட்கிற வேலையில் ஈடுபட்டாலும் மீட்கும் பொருளை கொடுக்கிற வேலையில் பங்கு பெறாது.

தகப்பனாகிய ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனை அவரது பிள்ளைகள் அனைவருக்கும் இயற்கையான முறையில் செல்கிறது. இந்த சுவிசேஷ யுக முடிவில் மகா பிரதான ஆசாரியர் அவரது பிராயச்சித்த வேலையை முடிப்பார். பிறகு உலகத்தின் சார்பாக மீட்கும் பொருளை உபயோகித்து அவர் முதலீடு செய்திருந்த உரிமைகளையும் அந்தஸ்துகளையும், மனுக்குலத்திற்கும், உலகத்திற்கும் கொடுப்பார். மனுக்குலத்திற்கும் அவர்களது குடியிருப்புக்கும் முழு விலைக்கிரயமும் கொடுக்கப்பட்டு, சர்வ வல்லவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, உலகமும் அதன் நிறைவும் கிறிஸ்துவிடம் திரும்பும். அதன்பிறகு அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் இருப்பார். நீதியானது மனுக்குலத்தின் மேல் உரிமை எதுவும் கோராது, அவர்கள் அனைவரும் கிறிஸ்துவினிடத்தில் திரும்பியிருப்பார்கள். தேவனுடைய ஏற்பாடுகளுக்கு எதிரான மனப்பாங்கு உடையவர்களை அவர் அங்கீகரிக்கமாட்டார்.

எனினும் அப்படிப்பட்டவர்கள், தெய்வீக நீதியின் கீழ் கட்டுக்குள் வைக்கப்படுவார்கள். ஏனெனில் மகா மத்தியஸ்தர் தெய்வீக நீதிக்கும் தெய்வீக இரக்கத்திற்கும் பிரதிநிதியாக இருப்பார். அவரது ராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு ஒரு பெரிய பாடத்தை போதிப்பது கடமையாகவும், உரிமையாகவும் இருக்கும். தீர்க்கதரிசனங்கள் ஒன்றில் நாம் இப்படியாக வாசிக்கிறோம்: “நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.” (ஏசாயா 2:3; மீகா 4:2) எருசலேமுக்கு வராத வம்சத்தினர் ஆசீர்வாதத்தை பெறமாட்டார்கள் என்கிற கட்டளை நிறைவேறும். (சகரியா 14:17-19)

வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், ஆயிரம் வருட ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் போது, அதன் ஆசீர்வாதங்கள், தெய்வீக பிரமாணங்களை அனுசரிக்க நாடுகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ளுகிறதை தவிர ஆசீர்வாதத்தை பெற வம்சங்களுக்கு வேறு வழி இல்லை. அப்படிச் செய்ய அவர்கள் போதிக்கப்படுவார்கள். ஏற்ற காலத்தில் கர்த்தரின் அறிவின் வெளிச்சம் பூமி முழுவதையும் நிரப்பும். தெய்வீக ஞானத்தினால் அறியாமையும் மூட நம்பிக்கையும் நீக்கப்படும். இது புது உடன்படிக்கை இஸ்ரயேலுடனும் சகல மனுக்குலத்துடனும் செய்யப்படும். இவர்களும் இஸ்ரயேலராவார்கள். ஏனெனில் தேவன் புறஜாதிகளையும் மேசியாவிடம் கொடுப்பார். அவரது அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமல்ல, பூமியனைத்திற்கும் அவர் ராஜாவாக இருப்பார். “என்னைக் கேளும். அப்பொழுது ஜாதிகளை உமக்கு சுதந்தரமாக கொடுப்பேன்.” சகல மனுக்குலமும், தெய்வீக பிரமாணத்தை கற்றுக்கொள்ளவும் தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் அவர் இருப்புக்கோலால் அரசாளுவார். (சங்கீதம் 2:6-12)

**R4819**

## THE FALL OF SAMARIA
## சமாரியாவின் வீழ்ச்சி

2 நாளாகமம் 17:1-18

“அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்.” நீதிமொழிகள் 29:1

இந்த பாடத்தின் முக்கிய நாயகனாகிய இஸ்ரயேலின் ராஜா ஓசெயா, அவனுக்கு முன்னிருந்த ராஜாக்களைக் காட்டிலும் அதிக தீமை செய்யாதவனாக இருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அசீரியாவின் ராஜா தனது ராஜ்ய பாரத்தை இஸ்ரயேல் தேசத்துக்கு விரிவுபடுத்தியதால், ஓசெயா ராஜா அவனுக்கு பகுதி கட்டினான். அது சில வருடங்கள் தொடர்ந்தது. ஓசெயா ராஜா எகிப்தியர்களின் ஒத்துழைப்பு இருக்கிறது என்ற நினைத்து அசீரியா ராஜாவுக்கு பகுதி கட்டுகிறதை நிறுத்தினான். அதினிமித்தம் அசீரியா படை முன்னேறி தலை நகரமாகிய சமாரியாவை முற்றுகைப் போட்டது. சமாரியா இந்த முற்றிகையை மூன்று வருடம் தாக்குப்பிடித்தது. அதன் முடிவு ஓசெயாவின் ஒன்பதாம் வருடத்தில் வந்தது. பத்து கோத்திரத்தாரின் ராஜ்யபாரம் முடிவுக்கு வந்தது. அசீரியா ராஜா, இஸ்ரயேலர்களை சிறைபிடித்துக் கொண்டு போய் அசீரியா ராஜ்யத்தின் பகுதிகளில் குடியமர்த்தினான்.

இஸ்ரயேல் தேசத்தின் வீழ்ச்சி சாலொமோன் காலத்திலிருந்து படிப்படியாக நடந்த ஒன்றாக இருந்தது. மதத்தில் விருப்பம் உள்ளவர்கள் தெற்கு பகுதியாகிய யூதாவுக்கு ஈர்க்கப்பட்டார்கள். பிறகு சிறிய கோத்திரமாகிய பென்யமீன் பரிசுத்த நகரம் மற்றும் ஆலயத்தை மட்டும் பெற்றிருக்காமல், யேகோவா தேவனுடைய ஆராதனையால் ஈர்க்கப்பட்ட பரிசுத்த இஸ்ரயேலர்களையும் படிப்படியாக பெற்றது. இவர்கள் தங்கள் கோத்திரத்தின் விக்கிரகாராதனையை எதிர்த்து வந்தார்கள்.

ஓசெயா இறுதியாக நீக்கப்படுவதற்கு முன்னதாக பத்து கோத்திரத்தார் வீணாகிப் போனார்கள். அங்கு இருபத்தி எட்டாயிரம் பேர் மட்டுமே மீதியாயிருந்தார்கள். முன்பு தேசத்தின் ஜனத்தொகை இலட்சக்கணக்கில் இருந்தது.

முந்தைய போர்களில் அவர்கள் சிறைக்கைதிகளாக கொண்டு போகப்பட்டார்கள். அவர்கள் மதத்தை இழந்து பெயரளவில் மட்டுமே இஸ்ரயேலர்களாக இருந்தார்கள். அவர்கள் பிதாவாகிய தேவன் இல்லாமல், ஆபிரகாமின் வாக்குத்தத்திலும் இஸ்ரயேல் தேசத்திலும் அக்கறை இல்லாமலும் இருந்தார்கள். அவர்களது புதிய நாடும் மதமும் அவர்களுக்கு ஏற்புடையதாக இருந்தன. இருபத்தி எட்டாயிரம் பேர் மட்டும் இஸ்ரயேலர் என்ற பெயரில் மட்டுமே பெருமை கொண்டார்கள். அவர்கள் விக்கிரகாராதனைக்காரராக ஆகி தேவனுடைய உறவிலிருந்து விலகியிருந்தனர். வெளிநாடுகளில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரயேலரைப் பற்றி

நினைக்கும் போது, பத்து கோத்திரத்தின் ராஜ்யம் அழிந்த போது அங்கே சொற்பமானவர்களே இருந்தார்கள் என்பதை நினைவுகூர வேண்டும். தேவனிடத்தில் அவர்களது மத விசுவாசத்தை பராமரித்தவர்கள், அவர்களது குடும்பத்தில் விருத்த சேதனத்தை கடைபிடித்து இப்படியாக இஸ்ரயேலன் என்ற அங்கத்துவத்தை பராமரித்தார்கள்.

### இஸ்ரயேலின் வீழ்ச்சி கர்த்தருடைய தீர்ப்பு

பிற்காலத்தில், யூத ராஜ்யத்தில் இரண்டு கோத்திரத்தார் பாபிலோனுக்கு சிறைபட்டு போன போது, கோத்திரப் பிரிவுகள் எல்லாம் போய் யூதர்கள் என்ற பெயர் இஸ்ரயேலருடன் ஒத்த ஆதிக்கம் பெற்றது. இப்படியாக நமது கர்த்தரின் நாட்களில் "காணாமல் போன ஆடாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு" பணி செய்ய வந்ததாக அவர் அறிவித்தார். பிற்காலத்தில் அப்போஸ்தலர் யாக்கோபு எழுதும் போது, "சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரம்" என்று கூறுகிறார். சுற்றுப்புற தேசங்களிலும், இஸ்ரயேல் தேசத்திலும் எல்லா கோத்திரங்களிலும் சில பேர் தேவனுக்கு விசுவாசமாக இருந்தனர். வெளி தேசங்களில் இருந்தவர்கள் வருடா வருடம் எருசலேமுக்கு வந்து பஸ்கா பண்டிகையையும் பாவ நிவாரண நாள் காரியங்களையும் ஆசாரித்தார்கள். காணாமல் போன என்பது சிதறடிக்கப்பட்டதையே குறிக்கிறது. தற்காலத்தில் கூட யூதர்கள் உலகெங்கிலும் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ள இஸ்ரயேலின் வீழ்ச்சி நேரடியாக நமக்கு சொல்லப்பட்டுள்ளபடி கர்த்தருடைய தீர்ப்பாக இருந்தது. "ஆகையால் கர்த்தர் இஸ்ரயேலின் மேல் மிகவும் கோபமடைந்து அவர்களைத் தம்முடைய முகத்தை விட்டு அகற்றினார். யூதா கோத்திரம் மாத்திரமே மீதியாயிற்று." (2 ராஜாக்கள் 17:18)

பாவமானது மிகவும் இயற்கையான வழியில் தேசத்தை அழிக்க முனைகிறது. தேசத்தின் ஜனங்களின் ஜீவாதாரமானவைகளை அழிப்பதின் மூலம் அதைச் செய்கிறது. இஸ்ரயேலின் விஷயத்தில் இதைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. தேவன் அந்த தேசத்துடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் சென்றிருந்தார். அதன் மூலம் அவரும் அவர்களும் கட்டுப்படுத்தப்பட்டனர். இஸ்ரயேல் தேவனுடைய ஜனங்களாக இருக்கவும் உண்மையுடன் ஊழியம் பண்ணவும் கீழ்ப்படியவும் ஒப்புக்கொண்டனர். அவர்கள் அப்படி செய்தால், தேவன் அவர்களுக்கு விசேஷித்த விதமாக தயவு காண்பிக்கவும், அவர்களது விருப்பங்களை நிறைவேற்றவும் ஆடுகளையும், மாடுகளையும், சுகத்தையும் மற்றும் செழுமையையும் கவனிப்பதாகவும் உடன்பட்டார். அவர்கள் விசுவாசமாயும் உண்மையாயும் இருக்கும்வரை அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மாறாக, அவர்கள் அந்த உடன்படிக்கைக்கு உண்மையற்றவர்களாக இருந்தால், அவர்களை விசேஷித்த விதமாக துன்புறுத்தி, தண்டித்து, சத்துருக்களின் கையில் ஒப்புக் கொடுப்பதாக உறுதியளித்தார். இப்படியாக இஸ்ரயேலின் செழுமை அல்லது தோல்வி நிச்சயமாக கர்த்தரின் கிருபையை அல்லது வெறுப்பை குறிப்பிட்டது. இது மற்ற தேசங்களுக்கு பொருந்தாது.

நமது பாடம் ஜனங்களுக்கு எதிரான கர்த்தருடைய சாட்சியத்தை விவரிக்கிறது. அதில் உடனபடிக்கையின் அவர்களது பங்கில் எதில் அவர்கள் தோல்வியடைந்தார்கள் என்பதை அவர் குறிப்பிடுகிறார். அவர்கள் செய்ய வேண்டியதை செய்யாமலும், செய்யக்கூடாததை செய்தும் வந்தார்கள். எனினும் கர்த்தர் இஸ்ரயேல் மற்றும் யூதாவினிடத்தில் தீர்க்கதரிசிகள் மூலம் சாட்சி கொடுத்தார். "நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, உங்கள் பிதாக்களுக்கு கட்டளையிட்டதும், என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உங்களுக்கு சொல்லியனுப்பினதுமான நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள் ஞானதிருஷ்டிகாரர் எல்லாரையும் கொண்டு இஸ்ரயேலுக்கும் யூதாவுக்கும் திடச்சாட்சியாய் எச்சரித்து கொண்டிருந்தார்." தேவன் அவருடைய பங்கையும் அதற்கு மேலாகவும் செய்தார். மேலும் நாம் வாசிக்கிறதாவது: "அவர்கள் செவிகொடாமல், தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற்போன "கடினக் கழுத்துள்ள" தங்கள் பிதாக்களைக் போல தங்கள் கழுத்தை கடினப்படுத்தினார்கள்." "கடின கழுத்து" என்பது சுயசித்தத்தையும் இருதயத்தின் கலகம் புரிகிற தன்மையையும் அடையாளமாக குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது.

### சகாயம் இன்றி அழிக்கப்பட்டது

நீதிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்ட நமது தலைப்பு வசனம் தேவனுக்கும் பாவத்திற்கும் இடையேயான முரண்பாட்டின் இறுதி முடிவு என்ன என்பதைக் கூறுகிறது. கண்டனங்கள் சரியானபடி ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால். திருந்தும் உணர்வுகள் அவர்களிடம் இல்லையென்றால், அவர்கள் எதிர்மாறான விளைவை பெறுவார்கள். பாவியானவன் அதிகமான பிடிவாதம் உடையவனாகவும், சுயசித்தம் உடையவனாகவும் தேவனுக்கு விரோதமாகவும் இருப்பான். சர்வ வல்லவருடனான இப்படிப்பட்ட போட்டியின் பலன் அவர்கள் கவிழ்க்கப்படுதலும் அவர்களது அழிவுமாகும். அது ஒரு மீட்பு இல்லாத சகாயம் இல்லாத அழிவு. இரண்டாம் மரணத்திற்கு அனுப்பப்பட்டவர்களுக்கு எந்தவித நம்பிக்கையும் இராது.

இரண்டாம் மரணமாகிய இந்த சகாயம் இல்லாத அழிவு இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுமென்றே தீமை செய்தவர்களுக்கு மட்டுமே வரும், தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் அடிக்கடி கண்டிக்கப்பட்டும் கடின கழுத்துள்ளவர்கள். சபையில் சிலர் இந்த வகுப்பில் வகைப்படுத்தப்படலாம். ஏனெனில் முன்பு சத்திய அறிவொளியை அனுபவித்திருப்பார்கள். ஆனால் உலகத்தார் இரண்டாம் மரணத்திற்கு வகைப்படுத்தப்படும்படி தேவனைப்பற்றிய சத்திய அறிவொளியை பெறவும், கண்டனத்தை பெறவும் இல்லை. ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கமும் இரண்டாம் மரணத்திற்கு தீர்ப்பிடுவதற்கு முன்னர் நித்திய ஜீவனுக்கான சந்தர்ப்பங்களையும் சலுகைகளையும் பெற வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டிருக்கிறார்.

இதன் தத்துவம் தெளிவாக இருக்கிறது. ஆதாமின் பாவம் மற்றும் அவர் பாவியாக தீர்ப்பிடப்பட்டதில் எல்லா மனிதருக்கும் வந்த ஆதாமிய மரணம் துடைத்தெறியப்பட்டு ஆதாமும் அவரது இனத்தினர் அனைவரும் அதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். மனுமக்களை அந்த தண்டனையிலிருந்து விடுவித்து உத்தரவாதம் அளிக்கக்கூடிய உரிமை மகா இரட்சகராகிய இயேசுவிடமிருந்தது. அவர் தம்மையே மீட்கும் விலைக்கிரயமாக எல்லாருக்குமாக கொடுத்தார். இது ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது. இந்த மாபெரும் உண்மை இந்த சுவிஷே யுகத்தில் கொஞ்ச பேருக்கு விளங்கி வருகிறது. அவர்கள் கேட்கிற காதும் பார்க்கிற விசுவாச கண்களையும் உடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே ஆதாமினால் வந்த மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட இயேசுவின் சீஷர்களாக ஆகும்படி, உண்மையாக அல்ல. விசுவாசத்தினால் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

பொதுவாக கவனிக்கத் தவறுகிற ஒரு முக்கியமான

உண்மை என்னவென்றால், இயேசுவின் மரணத்தின் மூலம் தேவனுடைய முன்னேற்பாடு ஆதாமுக்கும் அவரது குடும்பத்தார் அனைவருக்கும் பொருந்துகிறது என்பதாகும். ஆதாமிற்கு கொடுக்கப்பட்டு, இழந்ததை தவிர்த்து, தேவனுடன் நல்லிணக்கம் ஆவதற்கு ஒவ்வொரு அங்கத்திற்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. நம்மில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக இந்த சலுகையை தற்காலத்தில் அனுபவிக்கிறார்கள். எதிர்காலத்தில் இதே மாதிரி சலுகையை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிக்கமாட்டார். அவரது மீட்பின் வேலையில் ஒரு பங்கு மட்டுமே இனத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அநேகர் தேவனுடைய கிருபையை கேட்டு, கண்டு, புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் இந்த மாபெரும் சத்திய அறிவுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இது நாகரீக தேசங்களில் வாழ்கிற புறஜாதி தேசங்களும் உள்ளடக்கியது. இவர்களது காதுகளும், கண்களும் கிறிஸ்து இயேசுவில் தெய்வீக கிருபையின் செய்தியை கேட்கவோ, பார்க்கவோ இல்லை. இதுநாள் வரையில் அவர்கள் அவரை மறுக்கவோ அல்லது அவர் அவர்களை மறுக்கவோ இல்லை.

### இஸ்ரயேலின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மறுசீரமைப்பு

எதிர்காலத்தில் இந்த அனைத்து ஜனங்களும் சத்திய அறிவுக்குள் கொண்டு வரப்படும் போது, தேவனுடைய கிருபை அவர்களுக்கு கிடைக்கும். இப்பொழுது சபையானது "மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும் அல்லது ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்" இருப்பது போல அவர்களுக்கும் இருக்கும்.

இஸ்ரயேலர் ஒரு தேசமாக தோல்வியடைந்த போது தண்டனையை அனுபவித்தது; அவர்கள் அழிக்கப்பட்டார்கள், ஆனால் சகாயம் இன்றி அல்ல. இந்த யுக முடிவில், சபையின் தெரிந்து கொள்ளுதல் முடிந்து, முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவேறினவுடன், தேவனுடைய கிருபை இஸ்ரயேலரிடம் பன்னிரண்டு கோத்திரத்துக்கு திரும்பும். மேசியாவின் மகிமையான ஆளுகையின் கீழ் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவதே மனுக்குலத்திற்கு முதலாவது ஆசீர்வாதமாக இருக்கும் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. கர்த்தர் அவர்களை வடக்கு தேசத்திலிருந்தும் அவர் அவர்களை சிதறடித்த தேசங்கள் அனைத்திலிருந்தும் அவர்களது சொந்த தேசத்திற்கு கொண்டு வருவார் என்பதே அவரது விசேஷித்த வாக்குத்தத்தமாக இருக்கிறது.

பரிசுத்த பவுல் இந்த காரியத்தை ரோமருக்கு எழுதின தனது நிருபத்தில் வெளிப்படையாக நமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். (ரோமர் 11:25-32) இந்த வாதமும், மாம்சீக இஸ்ரயேலர், ராஜ்யத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர் மூலம் ஆசீர்வாதத்தை பெறுவார்கள் என்பதும் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்பட வேண்டும். (வசனம் 32)

இஸ்ரயேல் தேசம் தெய்வீக கட்டளையை மீறினார்கள். ஆகையால் அவர்கள் தண்டனைக்கு பாத்திரவான்களே. ஆனால் இதற்கு தேவன் முன்னரே ஆபிரகாம் மூலம் வாக்குத்தத்தம் பண்ணின தெய்வீக இரக்கத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டார்கள் என்று பொருளல்ல. அந்த இரக்கம் ஆரம்பிப்பதற்கான காலம், நமது இந்த பாடத்தில், சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஏழு நூற்றாண்டுகள் வரை, "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை" திறக்கவும் நம்மை திரும்ப தேவனிடம் கொண்டு வருவதற்கு அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராக இயேசு வந்து மரிக்கும் வரை வரவில்லை. நாம் வாசிக்கிறதாவது: "கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்."

இஸ்ரயேல் ஓசெயாவின் நாட்களிலோ அல்லது வேறு எந்த காலத்திலோ அல்லது வேறு எந்த தேசமோ ஜீவன் மற்றும் அழியாமையை எதையும் அறியவில்லை. இதை தேவன் ஏற்ற காலத்தில் இரட்சகர் மூலமாக மனுக்குலத்திற்கு கொடுக்க நோக்கங்கொண்டிருந்தார். மறுபடியும் அப்போஸ்தலர் கூறுவதாவது: "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதுமான இவ்வளவு பெரிதான இரட்சிப்பு." (எபிரேயர் 2:3)

பாவத்திற்காக தேவன் கொடுத்த தண்டனை மரணம் என்பதையும் இந்த தண்டனை பாவத்தினால் பிதாவாகிய ஆதாமின் மேலும் அவரது முழு குடும்பத்தின் மேலும் வந்தது என்பதையும் இப்படியாக ஆதாமின் பாவத்தினால் மனுக்குலம் முழுவதும் மரிக்கிறார்கள் என்பதையும் நாம் மனதில் வைப்பது நல்லது. ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாக மீறுதல்கள் மற்றும் பாவத்தில் அனைவரும் மரித்தவர்களாயிருக்கிறோம் என்பதையும் தேவன் இரட்சகரையும் மீட்கும் வேலைகளையும் கொடுத்திருக்கிறார் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைப்பது நல்லது. இந்த வேலை நமது இனத்தில் ஒவ்வொரு அங்கத்திற்கும் மிகவும் பயன் அளிக்கக்கூடியது என்பதையும் இரட்சகரின் பலியின் புண்ணியத்தின் தனது பங்கை அனுபவித்து, வேண்டுமென்றே, விருப்பத்துடன், தெரிந்து தவறு செய்பவர்கள் மட்டுமே இரண்டாம் மரணத்திற்கு, அனுப்பப்படுவார்கள் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைப்பது நல்லது, இரண்டாம் மரணம் எனது தெய்வீக பிரமாணத்தின் கடைசியான தண்டனை என்பதையும், நம்மில் அநேகர் நம்பும்படி தவறாக போதிக்கப்பட்ட நித்திய ஆக்கினை அல்ல என்பதையும் ஞாபகத்தில் வைப்பது நமக்கு நல்லது. "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோமர் 6:23)

---


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :



சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com



**FOR PRIVATE CIRCULATION ONLY**